...ருக்கு © ..., 2011

EELA NEELA ODY VAA

: Indra Soundarrajan

ond Edition: June, 2011

Pages: 200

used: 11.6kg

ரூ. 85/-

GAL NILAYAM
New No. 13,
rtments,
n Street,
nai-600 017
342899, 24327696
@thirumagalnilayam.com
thirumagalnilayam.com

aa Graphics, Chennai-94. Ph: 8939475707
T PRINTING CO., Chennai - 5 Ø 28446166, 28446891



# நீலா நீலா ஓடிவா!

## 1

**வி**டியப் போகிறது!

கட்டி இறுக்கும் பணி-பால்காரனின் மணி சப்தம் இரண்டும் சேர்ந்து கோபால்ராவை எழுப்பிவிடுகின்றன. பரபரவென்று இரு கைகளையும் சூடு பறக்க தேய்த்துக் கொண்டு அப்படியே மஞ்சள் பூசுவது போல் முகம் முழுக்க பூசிக் கொள்கிறார். காது மடலில் அருகம்புல் கொத்தாக முடி! கையை நிரடுகிறது. 'இன்றாவது வெட்டியெறிய வேண்டும்'-நினைத்துக் கொள்கிறார். ''டாண்''-தலைமாட்டு கடிகாரம் மணி ஐந்தரை கோபால்ராவ் என்கிறது.

இனி அடுத்தடுத்து ஏழுமணி வரை ஜாகிங், அரோபிக்ஸ், தியானம் என்று சரியாக இருக்கும்.

அறுபது வயதைத் தாண்டிவிட்டார், அங்கங்கே ஓவராகவே நரையோடிக் கிடக்கிறது. இருந்தும் வாலிப உணர்வு மிகுதியும் இருப்பதாக ஒரு நம்பிக்கை கோபால் ராவுக்கு.

ஜாகிங்கும் தியானமும் தான் பரிச்சயமான பயிற்சிகள். இந்த அரோபிக்ஸ் புதிதாக மகள் நீலாவால் வந்து ஒட்டிக் கொண்ட சமாசாரம்.

டி.வி.யை போட்டுக் கொண்டு இறுக்கமான உடையோடு ஆடியபடியே நீலா செய்யும் பயிற்சியை பார்த்து விட்டு, "என்னம்மா இது கூத்து?" என்று கேட்கப் போக "கூத்தா?" என்று கேள்வியோடு நீலாவுக்கு கூட கோபம் கிளம்பிக் கொண்டு வந்தது. அதற்கு முன் நீலா குறித்த ஒரு அறிமுகம் அவசியமல்லவா?

நீலா.

கோபால் ராவ் நாற்பது வயதில் கண்டெடுத்த ஒரு கன்னிப் புதையல். Yes. so delayed! but she is highly valuable எப்படி? தங்கம் வைரம் என்று கோடிக் கணக்கில் வைத்திருக்கிறாளா-யாருக்காவது உயிர்த் தோழியா? என்றெல்லாம் கேட்டுவிடக் கூடாது.

இந்த நீலாவின் சிஷ்யைதான் கல்கி.

ஆமாங்க... பாலசந்தர் சாரோட அதே கல்கிதான்!

கல்கியும் இன்று பெரிய ஹீரோ (யின்)?

(நீலாவும் தான்!-அதை போகப் போகத் தெரிந்து கொள்வீர்கள்)

இளமை நீலாவிடம் எல்லாவற்றையுமே வாரித்தான் கொட்டியிருக்கிறது.

உச்சி முதல் உள்ளங்கால் வரையில் பகுதி பகுதியாக பார்க்கும் போது நக்மா, மீனா, சங்கீதா, சுகன்யாக்களைப் பார்க்கலாம்.

ஒரு ஹீரோயின் அழகானவளாக இருந்துதான் தீர வேண்டுமா என்று சிலருக்கு கேட்கத் தோன்றும்.

yes.

No one can enter in this matter. Suppose average these is no sustain.



அத்துடன் நீலாவின் இந்த மேல்மட்டக் கவர்ச்சியில் ஏகமாய் பாலும், நெய்யும் இருக்கிறது. காம்ப்ளான் ஹார்லிக்ஸ் இருக்கிறது. கான்வென்ட் படிப்பு, டென்னிஸ் விளையாட்டு, மாருதியில் அவுட்டிங் என்கிற சமாசாரங்களே மிகுதி.

அதிலும் ராவ் மாதிரி அம்பாசடர் லெவல் மனிதர்கள் வெளிநாட்டிலேயே அதிக நாட்களை கழித்து முடித்தவர்கள். என்ன கொஞ்சம் உஷ்ணாதிக்கமான தேசங்கள். 'எத்தியோப்பியா, ஈராக் ஆஃப்கானிஸ்தான்' என்கிற தண்ணியிலாக் காடுகள்.

கோபால்ராவ் சண்டை போட்டு கேரளா, ராஜ்தானிலெல்லாம் கவர்னராய் குப்பை கொட்டியிருக்க முடியும். ஏனோ விரும்பவில்லை.

விதி போன போக்கில் போனவர் (அப்படித்தாங்க அவர் கூட ஒரு பேட்டியில் சொல்லியிருக்கிறார்)

போன வருடம் பெங்களூர் வாசி. குளிர் ஒத்துக் கொள்ளவில்லை என்று சென்னைவாசியாகிவிட்டார். (வெயில் தாங்கலைன்னு! ஊட்டிக்கு ஓடப் போறார் பாருங்க.)

இப்போதைக்கு ஜாகிங்கிற்கு ரெடியாகிக் கொண்டிருக்கிறார்.

தொந்தியை ஒரு பார்வை பார்த்துக் கொள்கிறார்.

'இது இன்னும் ஒரு மாசத்துல குறையலேன்னா என் கூட பேசறத மறந்துடுங்க...'-நீலா போட்ட கண்டிஷன் ஞாபகத்தில் நெளிகிறது. பல் விளக்கி வாஷ்பேசினில் நுரைக் குழம்பை கொப்பளிக்கும் போது எதிர் கண்ணாடியில் தெரியும் காவி படிந்த பற்கள் வேறு மிரட்டுகிறது.

“அப்ஸ்... என் பல் இது? இனி பீடா வெத்தலைன்னு எதையாவது போட்டீங்க தெரிஞ்சது சேதி...” நீலாவின் மிரட்டல் காதில் கசிகிறாப்போல் ஒரு பிரமை.

“நல்ல பல் டாக்டரை வேற பார்க்கணும். இல்லேன்னா நெருங்கி நெருங்கி பழகினவங்களும் நடுவுல எதனால இத்தனை இடைவெளி? என்கிற கால்கேட் விளம்பர மாயிடுவோம். பயத்துடன் முகத்தின் தண்ணீரை தெளித்துக் கொள்கிறார்.

5.40

காலுக்கு கேன்வாஸ் தயாராகிவிட்டது.

ஒருமுறை குதித்து பார்த்துக் கொள்கிறார் அதற்கே மூச்சிரைக்கிறது. வாசற்புரமாய்ப் கிரில்கேட்டிற்கு அப்பால் பால் பாக்கெட்டும், ஹிந்துவும் கிடக்கிறது. தள்ளி கேசவ் படுத்துக்கொண்டிருக்கிறான். இந்த கேசவிற்கு நாலு காலும் ஒரு வாலும் உண்டு. நாலாயிரம் ரூபாய்க்கு நீலா வாங்கிக் கொண்டு வந்து ஆதிசேஷன், ச்சீ அல்சேஷன்! ‘என்னமாய் தூங்குகிறது... நாயின் இலக்கணமே எழுந்திரு!’ கோபால் கான்வாஸ் காலால் ஒரு உதைவிட நிமிர்ந்து ஒரு பார்வை பார்க்கிறது. சரியா கஞ்சா பார்வை. பின் திரும்பவும் தூங்க முஸ்தீபு. அதற்கு தெரியும் கோபால்ராவ் ‘நீயெல்லாம் ஒரு நாய், நாய் இனத்துக்கே அவமானம்’ என்று தலையிலடித்துக் கொண்டு கிளம்பி விடுவார் என்று.

இன்றும் அதே நிலைதான்.

கோபால்ராவ் வீதிக்கு வருகிறார். (திரும்பும்போது அதிர்ச்சி காத்திருக்கு சார்!)

ஒரஞ்சாரமாய் தூங்குமூஞ்சி மரங்களின் கூட்டம். நடுவில் பனி மூட்டம். பாலுமகேந்திரா படம் பார்ப்பது போல் கூட இருக்கிறது. ஓடத் தொடங்குகிறார்-ஒட்டிக் கொள்கிறார் இன்னொருவர். இவர் பெயர் புஷ்பராஜ்.



“ஹலோ சார்...”

“ஹல்லோ பூஷ்பா...”

“சார். அது பொம்பள பேர்.”

“தப்பென்ன அதுல இருக்கு. ராஜாமணின்னு கூடத் தான் இருக்கு. யார் வேணா வெச்சுக்கலையா?”

“பேரைத்தானே?”

“நாட்டி... ஆமா எங்க போயிருந்தே நாலு நாளா ஆளைப்பார்க்கலியே...”

“ஊட்டிக்கு சார். ஒரு ஷூட்டிங்.”

“ஓ... நீ ஒரு கேமராமேனாச்சே மறந்துட்டேன். எப்படி இருக்கு உங்க இண்டஸ்ட்ரி?”

“ஆஸ் யூஷுவல்.”

“இன்னுமா சினிமாக்கெல்லாம் உசிர் இருக்கு?”

“ஏன் அப்படி கேக்கறீங்க?”

“இல்ல இது டி.வி.க்கள் காலமாச்சேன்னு கேட்டேன்.”

ஒத்தடம் கொடுக்கிற மாதிரி ஓடிக்கொண்டே இருவரும் பேசிக் கொள்கின்றனர்.

“வாஸ்தவம்தான் சார். பாட்டுக்கெல்லாம் பிசினஸோ, மரியாதையோ சுத்தமா இல்ல. எந்த சேனல்ல பார் ஏதாவது ஒரு பாட்டு ஓடிகிட்டு இருக்கு. முன்ன ஒலியும், ஒளியும் போடும் போது ஊரே அடிச்சு போட்ட மாதிரி அமைதியா இருக்கும்...”

“யெஸ் யூ ஆர் ரைட்! இப்ப பாட்டுக்கு சுத்தமா எக்ஸ்பெக்டேஷன் இல்ல. ஆமா... அது என்ன மேன் ஹீரோ ஹீரோயின் தனியாகவே பாடமாட்டாங்களா, எதுக்கு பின்னால எப்பவும் ஒரு கூட்டம்...?”

''விடுங்க சார்... அதெல்லாம் மாறவே மாறாது. நாமெல்லாம் பேசியும் மாத்த முடியாது, ஜனங்க ரசிக்கிறாங்கல்ல...''

''அப்படின்னு யார் சொன்னது?''

''பாட்டு வரும்போது யாரும் வெளியில போறது கிடையாதே...?''

''ஓஹோ-அத்தனை பேரும் வெளியே போனாதான் அதுல மாற்றம் வருமா? ஆமா தியேட்டருக்கே ஆள் வரலைன்னா சினிமா இண்டஸ்ட்ரியையே இழுத்து மூடிடுவிங்களா?''

-புஷ்பராஜிடம் சிரிப்பு. ஜாகிங்கின் எல்லையும் முடியும் தொலைவு. எதிரே குடிசைவாசிகளின் சேரிப் பகுதியும் அங்காங்கே செம்பும், கையுமாக சிலரும் தெரிகின்றனர். லேசான துர்வாடை, போதும் கோபால்ராவ் திரும்புங்க என்கிறது.

திரும்பும்போது இருவரிடமும் இப்போது நடை. பனியை மீறி வியர்த்திருக்கிறது. சூரியனும் சோம்பல் முறிக்கிறான். சள புள சள நாட்டுப் பறவைகளின் சப்தம்,

''சார் நீலா எப்படி இருக்கா!''

''ஃபைன்!''

''நீங்க இங்க வந்து ஆறுமாசம் ஆகலை. ஆனா அதுக்குள்ள உங்களைவிட நீலா நல்ல ஃபேமஸ் ஆயிட்டாளே-நல்ல ஃபோட்டோ ஜெனிக் ஃபேஸ் சார் நீலாவுக்கு...''

-கோபால்ராவுக்கு பெருமிதமாக இருக்கிறது.

''குறிப்பா அந்த நவரத்னா அபார்ட்மெண்ட் பேயை அவ பிடிச்சு கொடுத்ததுல இருந்து எங்க இண்டஸ்டரியலையும்



அவள பத்திதான் பேச்சு. இந்த வயசுல அவளுக்கு ஆனாலும் ரொம்ப தைரியம்...''

''அந்த தைரியம் தான் எனக்கு கவலைத் தருது புஷ்பா...''

''ஏன் சார்...?''

''எங்க ஏதாவது வம்பில மாட்டிக்குவாளோன்னு தான்...''

''சார்... அவகிட்ட யாராவது மாட்டிக்காம இருந்தா போறாதா என்ன? டோண்ட் ஒர்ரி சார்...''

''ஆமா உன் பொண்ணு திவ்யா எப்படி?''

நீலாவுக்கு நேர் எதிர். கரப்பான் பூச்சிய பார்த்தாக் கூட வீல்னு அலற்ற டைப்பா இருக்கா...''

-பேசியபடியே திரும்பியதில் கோபல்ராவின் மைதிலி நிவாஸ் அருகே புஷ்பராஜ் பிரிய உள்ளே நுழைகிறார் கோபால்ராவ்.

கேசவ் இன்னும் தூக்கத்தில்...

தாண்டிச் செல்கிறார். அது நிமிர்ந்து கூட பார்க்கவில்லை.

''வரேன்... வந்து தண்ணியை ஊத்தறேன் இரு. நீயெல்லாம் ஒருநாய். எல்லாம் அவ கொடுத்த செல்லம்!''- முனங்கிக் கொண்டே உள் நுழைபவருக்கு தூக்கி வாரிப்போடுகிறது.

இது என்ன ஹாலில் எல்லாம் கலைந்து...''

சோபா கவிழ்ந்தது...

டீப்பாய் சாய்ந்தது...

பூச்சாடியெல்லாம் உடைந்து...!

''மைகாட்.... வாட் ஹேப்பண்ட்?

நீல்...நீல்...நீலா...''-அலறுகிறார் கோபால்ராவ். காலில் கூட ஓட்டம். அவள் அறைகூட திறந்தே இருக்கிறது! கூடாதே...

உள்ளே படுக்கையில் அடிவயிற்றில் ஆழமான கத்தி பாய்ந்த நிலையில் நீலா!

ரத்தம் ஆறாக ஓடி பாம்பாக வளைந்து, பாலா தோய்ந்து... நடு நெற்றியில் சுடப்பட்டது போல கோபால்ராவிடம் ஒரு அதிர்ந்த நிலை!

## 2

மழை வெளுத்து வாங்கிக் கொண்டிருந்தது.

அப்பாடா!' என்று மின்சாரம் ஒரு லாங்ரெஸ்ட்டுக்கு தாவியதில் மௌண்ட்ரோடே வண்டிமையில் புரட்டினா போல் தோன்றியது. அங்கங்கே தண்ணீர் குடித்துவிட்ட ஸ்கூட்டர்களுடன் எஜமானர்கள் மல்லு கட்டி கொண்டிருக்க, விரித்த குடையும் விஐபி சூட்கேசுமா ஆனந்த விகடன் சந்திலிருந்து வெளியே வருகிறார் ஒ பெரிய மனிதர். குடையை மீறி நனைகிறார்.

''இன்னாபா ஆட்டோ வேணுமா?''-ஏறலைன்ன தெரியும் சேதி என்கிற உரசலுடன், கேள்வியுடன் ஒ ஆட்டோ.

''ஆமா... மந்தைவெளி போகுமா?''

''உனக்கு எங்கே போகணும் சொல்லு?''

''அதான் மந்தைவெளின்னேனே...''

''குந்து.''-அவர் ஏறி உட்காருமுன் ஆட்டோ வேகம் எடுத்தது.



''மெள்ள போப்பா...'' அவர் குடையை மடித்து காலோரம் வைத்தபடி பதற ஆட்டோக்காரன் கேட்கிற மாதிரி தெரியவில்லை.''

ஆட்டோ சிறகு முளைத்த மாதிரி பறக்கிறது.

மழைச் சகதி உள்ளெல்லாம் பாய்கிறது.

''ஏம்ப்பா மெல்ல போகச் சொன்னேன்ல... ஏன் இப்படி பறக்கறே?'' அந்த மனிதரிடம் கூட இப்போது பயம் கலந்த அதட்டல்.

டிரைவர் திரும்பி ஒரு தினுசாக பார்க்கிறான். இருட்டில் தெளிவாக முகம் தெரியவில்லை.

''என்னப்பா! மந்தவெளி அதுக்குள்ற வந்துடிச்சா என்ன...?''

''ஆமாமா இறங்கு...''-பதிலும்-பதிலளித்த விதத்திலும் கடுமையான சொரசொரப்பு.

லேசாக அங்கும் இங்குமாய் வாகனங்களின் ஹெட்லைட் வெளிச்சப் புள்ளிகள். கண்ணைக் கரிக்கும் இருட்டில் நிற்கும் இடமே பிடிபடவில்லை. மழைவேறு பிலுபிலுவென்று...

''என்னப்பா... மந்தைவெளி மாதிரி தெரியலியே...''

''இறங்கிப் பார்-தெரியும்.''

-இறங்குகிறார் அந்தப் பெரிய மனிதர் சக்கென்று யாரோ கழுத்தைப் பிடித்து தள்ளியதில் கீழே விழுந்தது தான் தெரியும். கண் விழித்துப் பார்த்தபோது மெத்மெத்தென்ற மெத்தைமேல் கிடப்பதை உணர முடிகிறது.

அப்படியே எழுந்து கொள்ள முயன்றபோதுதான் உடம்பில் ஒரு பொட்டு துணிகூட இல்லாத உண்மை உறைத்தது.

ஐய்யய்யோ...!

பகீர் உணர்ச்சி பற்றி எரியத் தொடங்கியபோது எதிரே ஒருவன் வந்து ஒரு கவரை நீட்டுகிறான்.

அதை நீட்டி வாங்கிக் கொள்ளக்கூட கூச்சமாக இருக்கிறது.

“நீ யார்... இது என்ன கோலம். எங்க என் டிரஸ்ஸெல்லாம்? யாருடா நீங்கல்லாம்...”-பற்கள் நரநரக்க கோபமும் அழுகையும் கலந்து கொந்தளிக்கிறார் அவர்.

“கவரை முதல்ல வாங்கிப் பார்...”

“எனக்கு முதல்ல ஒரு துண்டாவது கொடு.”

“முதல்ல கவர்...”

“உன்னை கெஞ்சி கேட்டுக்கறேன் ஒரு கர்ச்சீஃப் ஆவது கொடு...”

“உன் டிரெஸ்ஸையே தரோம். இந்தக் கவரை வாங்கிப் பார்...”

-வாங்கிப் பார்த்தார். உள்ளே போட்டாக்கள். நிர்வாணமாக அவரேதான். விதம் விதமான போசில். கூடவே அவரைப் போலவே இன்னொருவன். அப்புறமாய் சில நிர்வாணப் பெண்கள்.

“டேய் என்ன நிர்வாணமாக்கி எதுக்குடா போட்டோல்லாம் எடுக்கறீங்க... யார் நீங்க... பாஸ்டர்ட்ஸ் யார் நீங்கல்லாம் நான் லேசுப்பட்டவன் கிடையாது. எங்கிட்ட இது என்ன விளையாட்டு?”

“ஸ்சூ... கத்தறத முதல்ல நிறுத்து. உன்பேர் சங்கர சுப்புதானே?”

“ஆ... ஆமா... உனக்கெப்படி தெரியும்?”

“வர்த்தமானன் சிட்ஃபண்ட் ஓனர் தானே?”



“ஆ... ஆமா... ஏய் நீங்க பிளான் பண்றீங்க. யூ வாண்டு டு சீட் மீ...”

கரெக்ட் அதேதான்... முழுசா அஞ்சு லட்சம். அதுதான் இந்த போட்டோவுக்கு நாங்க வெச்சுருக்கற விலை. கொடுத்துட்டா நெகடிவ் போட்டோ எல்லாம் திரும்ப கிடைக்கும். இல்லாட்டி எப்ப-எப்படி டிஸ்ப்ளே பண்றதுன்னு எங்களுக்கு நல்லாத் தெரியும்.

போலீஸ், சி.பி ஐ’னு யார்கிட்ட வேணா போய்க்கோ. நீ போறதுக்கு தகுந்த மாதிரி பிரச்சினையும், ரேட்டும்கூட பெரிசாயிகிட்டே போகும்.

இல்லேன்னா வழிக்கு வந்துடு...

-அவனது பேச்சு அந்த மனிதரை மயக்கத்தில் மூழ்கடிக்கப் பார்த்தது. தள்ளாடிக் கொண்டு படுக்கையில் மல்லாக்க விழுகிறார். சின்னக் குழந்தை மாதிரி விசும்பி விசும்பி அழுகிறார்.

## 3

என்ன டாட் பயந்துட்டீங்களா?”-கத்தியை அதாவது போலிக் கத்தியை உருவியபடி எழுந்திருக்கிறாள் நீலா.

எதிரில் பிளந்த வாயும், விரிந்த விழியுமாய் கோபால்ராவ்! இதயத்திடம் கூட குட்டிக்கரணம்.

ஸ்தம்பிப்பில் இருந்து விடுபட நெடு நேரமாகிறது அவருக்கு. பெருமூச்செரிகிறது.

“என்னம்மா... இப்படியா பயமுறுத்துவே- எதுல விளையாட்றதுன்னு இல்லையா.”

“டாட் இன்னிக்கு ஏப்ரல்-1. எப்படி வேணா விளையாடலாம். ஞாபகம் வெச்சுக்கோங்க.” நீலா நிமிர்ந்து எழுந்தபடி தரும் பதில் கோபால்ராவை தளர்த்துகிறது.

"நல்ல பொண்ணும்மா நீ" சலிக்கிறார்.

"அச்சு அசல் சினிமா அப்பா டயலாக். கேபிள் டி.வி. பார்க்காதீங்கன்னா கேட்டாதானே?"

-கேள்வியோடு நீலாவின் அன்றைய தினம் ஆரம்பமாகிறது. தாயில்லாத பெண். M.A.யில் தமிழ், ஆங்கிலம் எல்லாம் முடித்தாயிற்று. இப்போது ஜர்னலிசத்தில் நாட்டம் ஏற்பட்டு தபால் மூலமே அதற்குள்ளும் நுழைந்திருப்பவள். மர்ம நாவல்களை நிறைய படிப்பாள். சமூக பிரக்ஞை மிக அதிகம். அதனாலேயே பணக்கார பந்தா எதுவும் குறைவு. சரீர வசதிக்கு உடை உடுத்திக் கொள்ளும் கேஸ்.

பெர்முடாஸ் ட்ரவுசரும்-தொளதொள டீ ஷர்ட்டும் விருப்பமான உடை. இதில் ஒருமுறை அவளது காலழகை கண்டு ஒருவன் ஜொள்ளுவிட அவனை அருகில் அழைத்து காலை நன்றாக திருப்பித் திருப்பி காட்டி திருப்தியா என்று கேட்டவள்.

இல்லை என்று அவனும் விடாப்பிடியாக சொல்லி பார்வையை காலுக்குமேலெல்லாம் செலுத்தினான்.

நல்ல விலைக்கு வந்த வம்பாக மாறினான்.

தைரியமாகவே நீலா கேட்டாள்.

"டேய் எல்லா பொம்பளகிட்டேயும் இருக்கிறது தாண்டா என்கிட்டேயும் இருக்கு. வெறும் சதையடா. வயசானா சுருங்கிப் போற சதை. வியாதி வந்தா அழுகப் போற சதை. உன் அக்காகிட்டே இருக்கு-அம்மாகிட்ட இருக்கு-தங்கைகிட்ட இருக்கு. என்கிட்டேயும் இருக்கு. மூடி வெச்சிருக்கறதாலதான் சிருஷ்டியே தொடர்ந்து கிட்டு இருக்கு. திறந்து பார்த்துட்டா There is no Thrill.



எனக்கு ஆட்சேபணையில்லை-பார்க்கறியா?"

-அவள் பேச்சிலும் கேள்வியிலும் அவன் திருந்திவிட வில்லை. ஆனால் நிஜத்தில் மிரண்டான்.

'இது என்ன ஒரு பெண்ணிடம் இத்தனை தைரியமான பேச்சு...!'-வியந்தான்.

"நீ ஒரு வித்யாசமான பொண்ணு" என்றான்.

"கல்யாணம் பண்ணிக்கிறியா?"-இது நீலாவின் அடுத்த கேள்வி.

"ஆயிடுச்சே..." இது அவன் பதில்.

"பரவால்ல... நான் ரெடி இரண்டாம் தாரமாக..."

"தாயே-நீ பொம்பளையே இல்லை..." என்று கன்னத்தில் போட்டுக் கொண்டு ஓடினான். நீலா அன்று சிரித்த சிரிப்பு இருக்கிறதே...

கோபால் ராவ் ஆ ஊ என்றால் உப்புமா கிண்டி விடுவார்.

இன்றும்...

கூடவே புதினா துவையல்.

"என்னப்பா காம்பினேஷன் இது?" சலிப்போடு சாப்பிடுகிறாள் நீலா.

"அப்ப நீ வந்து வித்யாசமா சமைச்சு போடு..." கோபால் ராவ் மகளை மடக்கிவிட்டது போல பார்க்கிறார்.

"ஆச தோச அப்பளம் வடை-அப்படியே என்னை சமைக்காரியாக்கி வீட்டுல அடைச்சிடலாம்னு பார்க்கறீங்க, அப்படித்தானே?"

"இல்லையே, சமைச்சு வெச்சுட்டு கூட நீ ஊர் சுத்தப் போகலாம்."

‘‘நான் ஊர்சுத்தப் போகலை. எனக்கு இந்த செக்கு மாட்டு வாழ்க்கை முறையும் பிடிக்கலைப்பா...’’ சிற விழுகிறாள்.

‘‘எப்படி இருக்கம்மா பிடிக்குது?’’

‘‘சொல்லத் தெரியலப்பா.’’

‘‘ஆம்பளமாதிரி சுதந்திரமா நினைச்ச இடதுக்கெல்லாம் நினைச்ச நேரத்துக்கெல்லாம் போகணும், வரணும்னு ஆசைப்பட்டறே சர்தானே?’’

‘‘ஓரளவுப்பா... கட்டுப்பாடில்லாத சுதந்திரமும் ரொம் ஆபத்தமானது. அப்புறம் நாம அரசியல் மாநாடு, கட் ஊர்வலம், ரசிகர்மன்றம்னு சிதைஞ்சு போயிடுவோம் மூணுவேளை சோறு போட்டு ஐம்பது ரூபான்னு சீப்பாயிடுவோம்.’’

‘‘வேற எப்படி இருக்கணும்னு விரும்பறே?’’

கோபால்ராவ் கேள்விமுன் மௌனிக்கிறாள். அவ உணர்ச்சியை சரியாக சொல்ல வார்த்தை இல்லாத மாதி ஒருவகை மௌனம்.

‘‘எப்படி இருக்கம்மா உனக்கு பிடிக்குது?’’

‘‘எப்பவும் பரபரப்பா இருக்கணும்ப்பா...’’

‘‘அப்ப ஒரு பிரைவேட் டிடெக்டிவ் ஏஜென்ஸி சேர்ந்துடு.’’

‘‘ஒருத்தர் கீழ் வேலை பாக்கறதா? இம்பாசிபிள்.’’

‘‘பூமியே கடவுளோட கண்ட்ரோல்லதான் இருக்கு போது நாம ஒருத்தர் கண்ட்ரோல்ல இருக்குறது தப் என்ன?’’

‘‘பூமி கடவுளோட கண்ட்ரோல்லதான் இருக்கா. பாத்தியப்பா?’’



ஊஹும். இதற்குமேல் பேசக்கூடாது. பேசினால் எடக்கு மொடக்காகி விபரீதமாகிவிடும் என்பதுபோல் மௌனமாகிறார் கோபால்ராவ்.

‘‘என்னப்பா பதிலைக் காணோம்.’’

‘‘வேண்டாம்மா நீ விதண்டவாதம் பண்ணுவே அப்புறம். கடைசில எங்கெங்கியோ போய் ஜெனரேஷன் கேப்னு முடியும். வேண்டாம் நீ கிளம்பு. எங்க போறேன்னு மட்டும் சொல்லிவிட்டுப்போ...’’

‘‘கன்னிமராக்கு...’’

‘‘சரி. மத்யானம் லஞ்ச்?’’

கட்டாயம் வந்துருவேன். ஒரு ரசம் உருளைக்கிழங்கு போதும்பா... ‘‘கிளம்பிவிட்டாள். வாசல் அருகே நின்று கொண்டிருக்கிறது பஜாஜ் சன்னி. ஏறி அமரப்போகும் போது எதிரில் ஒரு நடுவயதுப் பெண்மணி.’’

‘‘யார் நீங்க என்ன வேணும்?’’

‘‘நான் ஒரு அனாதைம்மா. நல்லா சமைப்பேன். ஒரு சமையல்காரி உங்களுக்குத் தேவைன்னு கேள்விப்பட்டு...’’

‘‘டாட்...’’-நீலா கழுத்தை வளைத்து குரலை உட்பக்கம் அனுப்ப எட்டிப் பார்க்கிறார் கோபால்ராவ்.

‘‘கிச்சன்மெய்ட் வந்திருக்காங்க. என்னன்னு பாருங்க. நான் கிளம்பறேன்.’’

-பஜாஜ் சன்னி பாதையில் இறங்குகிறது.

-மார்பில் முயல் விளையாடுகிறது.

-விடலைகளுக்கு சிக்காகிப் போகிறது.

-நீலா எதைப்பற்றியும் கவலைப்படாத மாதிரி சன்னியை செலுத்துகிறாள்.

-வழியில் இடையிட்டது ஒரு போலீஸ் ஜீப்பும் ஆம்புலன்சும்.

அவள் கவனம் சற்று அதன்மேல் திரும்பியதில் அவை இரண்டும் ஒரு வீட்டின் முன் நிற்கின்றன.

"அது கேமராமேன் புஷ்பராஜ் வீடாயிற்றே?

-வீட்டு முன்னால் கூட கசகசவென்று கூட்டம்.

"என்னாயிற்று?

சன்னியை ஓரங்கட்டி நிறுத்தியவளுக்கு பகீர் என்றாகிப் போனது.

"பாவம்டா புஷ்பராஜ்-இருந்த ஒரு பொண்ணும் தூக்கு மாட்டிகிடிச்சு. காதில் விழுந்த குரலால் ரத்தம் வினாடியில் சூடாகிவிட்டது.

இறங்கி ஓடுகிறாள்.

புஷ்பராஜ் தலையில் கை வைத்தபடி சோகப் பதுமையாய்...

திவ்யா தொங்கிக் கொண்டிருக்கிறாள் மின்விசிறியில்.

"அங்கிள்..." அழைப்போடு போய் அவர் எதிரே நிற்கிறாள். நிமிர்ந்து பார்க்கக்கூட முடியவில்லை புஷ்பராஜால்.

"அங்கிள் எப்படி அங்கிள்-எப்படி ஆச்சு?"

"தெரியலம்மா..."

"தெரியலைன்னா-நேத்துகூட நல்லா பேசிகிட்டிருந் தாளே...?"

"நேத்து காலேஜ்ல இருந்து வந்ததுல இருந்தே சரியில்லைம்மா. ரொம்ப சோகமா இருந்தா. மார்க்தான் சரியா வந்திருக்காது. அதான் அப்படி இருக்கான்னு



நினைச்சேன். ஆனா இப்படி பண்ணிக்கற அளவுக்கு வருவாள்னு கனவுல கூட நினைக்கலை."

-இருவரின் ஊடே இன்ஸ்பெக்டர் நுழைகிறார். சம்பிரதாயங்களைத் துவக்குகிறார். நீலாவிடம் பேசியதை ரிபீட் செய்கிறார் புஷ்பராஜ்.

"ஏதாவது சண்டை சச்சரவு?"

"எதுவும் இல்லை சார்."

"காதல் அப்படி இப்படின்னு..."

"நோ சான்ஸ். அப்படியே இருந்தாலும் நான் அதுக்கு எதிரான ஆள் கிடையாது. இது எனக்கு பெரிய புதிரா இருக்கு. புரியலை சார். சாகற அளவுக்கு அவளுக்கு ஒரு பிரச்சினையும் கிடையாது சார்."

"போஸ்ட் மார்ட்டம்...?"

"ஏஸ் பெர் பொரசிஜர் பண்ண வேண்டியத பண்ணிக்குங்க."

-புஷ்பராஜ் சொல்லிவிட்டு அழ கூட்டம் வேடிக்கைப் பார்க்கிறது.

திவ்யா ஆம்புலன்ஸ் ஏறுகிறாள். பிணமாகத்தான்!

நீலா மட்டும் தாளமுடியாத துயரத்துடன் நெருப்பாக.

## 4

"ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க?" சங்கர சுப்பு எனும் அந்த மனிதரை பார்த்து அவர் மனைவி கேட்கிறார்.

"ஒரு வாரமாகவே நீங்க சரியில்லே... எதையோ பறி கொடுத்த மாதிரி ஒரே இடத்த வெறிச்சு பார்க்கறதும்-சோர்ந்துபோறதும்... என்ன நடந்துச்சு-என்கிட்ட சொல்லக் கூடாதா?"-விடாமல் வளைக்க ஆரம்பிக்கிறாள்.

"ஒண்ணுமில்லை சாவித்திரி."

"அப்ப நிறைய இருக்கு..."

"கொஞ்சம் நிம்மதியா இருக்கவிடேன்."

"நான் உங்க மனைவி. நானா உங்க நிம்மதிய கெடுப்பேன். நடந்தத சொல்லக் கூடாதா? நம் சிட்ஃபண்டும் நல்லாத்தான் போய்க்கிட்டு இருக்கு மத்தவங்க மாதிரி ஓடி ஒளிஞ்சுக்கற நிலை இல்லை. அப்படி இருந்தும் கவலைப்படறீங்கன்னா எதைப்பத்தி... எதுக்காக?"

-சாவித்திரி விடமாட்டாள் போல் தெரிகிறது "சொல்றேன் சாவித்திரி. ஆனா நீ என்னை சந்தேகப்பட மாட்டியே..."

"இது என்னங்க கேள்வி-அப்படி என்ன தப்பு செஞ்சீங்க நீங்க..." "நான் தப்பு செய்யலை சாவித்திரி. ஆனா வசமா ஒரு கும்பல்கிட்ட மாட்டிகிட்டேன்."

"கும்பலா... என்ன சொல்றீங்க?"

"சொல்றேன். அந்த கதவை சாத்திட்டு வா..."

வந்தாள்.

-"சத்யம் பண்ணு. வெளியே யார்கிட்டேயும் மூச்சு விடக்கூடாது."

"நீங்க விஷயத்தை சொல்லுங்க..."

"சாவித்திரி... இது கலிகாலம். ஒரு மனுஷனை இப்படித் தான் மிரட்றதுன்னு ஒரு விவஸ்தையில்லாத காலமா ஆயிப்போச்சு."

"என்ன சொல்றீங்க?"



"ஆமாம் சாவித்ரி. நான் இப்ப மிரட்டப்பட்டிருக்கேன். ரொம்ப கேவலமா மிரட்டப்பட்டிருக்கேன்." சங்கர சுப்பு சொல்லும்போதே வியர்க்கிறார்.

"யார் மிரட்டினாங்க... எதுக்கு மிரட்டினாங்க?"

"எல்லாம் பணத்துக்காக. இந்த வாரத்துல மட்டும் சிட்பண்ட் பணத்துல 20 லட்சத்த கொடுத்திருக்கேன்."

"20 லட்சமா? விபரமா சொல்லுங்க..."

"சொல்ல ஆரம்பிக்கிறார் சுப்பு. முடிக்கும்போது சாவித்திரிக்கும் மாரடைப்பு வராத குறை.

"போலீசுக்கு போகாம இப்படி நமக்குள்ளேயே..."

"பைத்யம். போலீஸ் பக்கம் போனா பிரச்சினை ரொம்ப மோசமாயிடுங்கறதாலதான் நான் வாய மூடிக்கிட்டு இருக்கேன். ஆள் உயர போஸ்டர்லாம் அடிச்சு ரெடி பண்ணிட்டாங்க. ஒட்டி மானத்த வாங்கிடுவாங்க. அதோட அவங்க யாரு, என்ன, ஏது எதுவும் தெரியாது. ஒருக்கால் அவங்களை போலீஸ் பிடிச்சு தண்டிச்சாலும் என்னோட மானம் போனது போனதாயிடும். எனக்கு என்ன செய்யறதுன்னே தெரியலை சாவித்திரி."-சொல்லி விட்டு கலங்குகிறார். சாவித்திரியும்... இருவரின் கலங்கி நிலைக்கு நடுவில் நுழைகிறாள் வினிதா. மகள்.

"ஏன் ரெண்டு பேரும் ஒரு மாதிரியா இருக்கீங்க...?" படுகாஷுவலாக கேட்கிறாள். இருவரிடமும் சுரத்தில்லை நிமிரவில்லை. மகள் எதிரே காட்டிக் கொள்ளக் கூடாது என்கிற லஜ்ஜைகூட இல்லை.

மலங்க மலங்க பார்க்கின்றனர்.

"என்னம்மா... என்னப்பா... என்ன நடந்துச்சு?"

"ஒண்ணுமில்லம்மா..."

"பொய். எனக்குத் தெரியக் கூடாதுன்னு நினைக்கிறீங்க."-நடுவில் தொலைபேசியின் அழைப்பு. கா கொடுக்கிறாள் வினிதா.

"யார் பேசறது?"

"நீங்க யார் அத முதல்ல சொல்லுங்க..."

"சங்கர சுப்பு இருக்கானா, இல்லியா? நேத்து தரேன் சொன்ன அஞ்சு லட்சத்தை வேற தராம ஊரை விட் ஓடிட்டானா?"-வினிதா முகம் மாறுகிறது.

"அப்பா யாருப்பா அஞ்சு லட்சம் அது. இதுன் கிட்டு..."-வனிதா போனை மூடியபடி கேட்கவும் சங் சுப்பு பாய்ந்து எழுந்து அவளிடம் இருந்து போன வாங்குகிறார்.

"டேய் நீ அஞ்சு லட்சம்தான் முதல்ல கேட்டே.... நா 4 மடங்கு கூட தந்துட்டேன். இன்னும் என் பிளாக்மெயில் உனக்கே நல்லாயிருக்கா?"

"அதெல்லாம் தெரியாது. அஞ்சு லட்சம் வரணு வரலேன்னா நாளைக்கு காலைல உன் ஏரியா பூரா உ போஸ்டராதான் இருக்கும். டொடக்."

-பதில் பேச்சுடன் தொலைபேசி முடங்கிக் கொண்ட நிஜமாலுமே சங்கரசுப்பு மயங்கி விழுகிறார்.

வினிதா ஒன்றும் புரியாமல் நிற்கும்போது வாசல்பு காலிங்பெல் சப்தம்.

"யார்னு போய் பாரும்மா..." என்கிறார் சாவித் வினிதாவும் போய்த்தான் பார்த்தாள்.

கோபால்ராவ்!



# 5

அதிசயமாக சமையல் கட்டுக்குள் நுழைகிறாள் நீலா. பசி அவளை உள்ளே தள்ளிவிட்டது. கோபால்ராவ் இருந்திருந்தால் இன்னேரம் சுடச்சுட ஏதாவது தயார் ஆகியிருக்கும். பசி தெரிந்திருக்காது. ஏனோ வேலைக்காரியே வைத்துக் கொள்ளமாட்டேன் என்கிறார். இன்று வந்த சமையல்காரியிடம் கூட என்ன சொல்லி எதைச் சொல்லி அனுப்பினாரோ யாருக்குத் தெரியும்? சலிப்போடு சமையல் மேடையை பார்ப்பவளுக்கு சம்பந்தமே இல்லாத இடத்தில் நிற்பதுபோல் பிரமை தட்டுகிறது.

கியாஸ் அடுப்பைக்கூட பற்ற வைத்தது கிடையாது. அடுப்பு ஏதோ ஒரு இரும்பு உலோகமாகத்தான் கண்ணுக்குப் படுகிறது.

முதல் தடவையாக இந்திய குடும்பப் பெண்களின் தனித்தன்மை சற்று வலுவானது என்கிற மாதிரியெல்லாம் எண்ணங்கள்.

தடவித்தடவி சமைக்க ஆரம்பிக்கிறாள். நடுவில் தும்மல் போடுகிறாள். இறுதியாக சகலத்தையும் ஊற்றி மூடிவிட்டு ஹோட்டலுக்கு போவது என்கிற முடிவுக்கு அவள் வந்தபோது கோபால்ராவும் உள் நுழைகிறார்.

"எங்கப்பா போயிட்டீங்க?"-கோபால்ராவிடம் பதிலில்லை போய் சோபாவில் அமர்ந்தபடி ரிமோட்டைத் தட்டுகிறார். டி.வி. திரையில் சுளுக்கு எடுக்கிற மாதிரி நடனக் காட்சி.

"ப்ச்சை." ரிமோட் ஆஃப் ஆகிறது.

''நான் கேட்ட கேள்விக்கு இன்னும் நீங்க பதில் சொல்லலை. பசி எனக்கு உயிர் போகுது தெரியுமா.''

''என் மனசும் சரியில்லைம்மா. நீ போய் ஹோட்டல்ல சாப்டுட்டு அப்படியே அப்பாக்கும் வாங்கிட்டு வந்துடேன்.''

''ஆமா எங்கே போயிட்டு வர்ரீங்க?''

''சும்மா... நம்ம சங்கரசுப்பு வீடு வரைக்கும்...''

''ஆங்... சங்கர சுப்புன்ன உடனேதான் ஞாபகத்துக்கு வரது. உங்க கேமராமேன் ஃப்பிரண்ட் இருக்காரே...''

''யாரு புஷ்பராஜா?''

''ஆமாம்ப்பா... அவரோட டாட்டர் சூஸ்சைட் கமிட் பண்ணிக்கிட்டா தெரியுமா உங்களுக்கு,''

''என்னம்மா சொல்றே?''-கோபால்ராவ் கேட்ட விதத்தில் நல்ல உச்சக்கட்ட அதிர்ச்சி.

''ஆமாம்ப்பா... அவர் பொண்ணு திவ்யா தூக்குல தொங்கிட்டா. காரணம் தெரியலை. நீங்கக்கூட அவரைப் பார்க்க போய்ட்ட வந்துருக்கறதான் நான் நினைச்சேன். நீங்க என்னன்னா சங்கர சுப்பு வீட்டுக்கு போய்ட்டு வந்துருக்கீங்க.''

-கோபால்ராவிடம் மௌனம். திவ்யா பற்றி காலையில் கூட புஷ்பராஜ் பேசினானே... ஓ... எத்தனை கொடியச் செய்தி இது. நினைக்கும்போதே பகீரென்றது. கூடவே சங்கர சுப்புவின் அந்த நிர்வாண போட்டோ விவகாரம் இப்போது க்ராஸ் ஸ்லைட் ஆனது.

காலையில் விடியும் மகள் வேறு பீதியை கரைத்து விட்டாள். அதற்கு பின் அடுத்தடுத்து இப்படி துக்கச் செய்திகள். அருகில் காலண்டரில் தெரியும்-Apirl 1 பார்த்து முறைக்கிறார் கோபால்ராவ்.



''சரிப்பா... இருங்க மாடர்ன் ரெஸ்டாரண்ட் வரை போய் உங்களுக்கும் சேர்த்து அள்ளிகிட்டு வரேன்.'' என்று கிளம்புகிறாள்.

பஜாஜ் சன்னி அவளை சந்தோஷமாக சுமந்தபடி ஓட ஆரம்பிக்கிறது.

கேசவ் நிமிர்ந்து ஒரு பார்வை பார்த்துவிட்டு திரும்ப தூங்க ஆரம்பிக்கிறான்.

கோபால்ராவிடம் இப்போது உறைந்த நிலை.

மனதில் எண்ண ஓட்டங்கள்,

'நல்ல வேளை சங்கர சுப்பு விவகாரம் தொடர்பாக எதையும் நீலாவிடம் பேசவில்லை. பேசியிருந்தால் அவள் இதை லேசில் விட்டிருக்கமாட்டாள்' கிண்டி கிழங்கெடுத்திருப்பாள்.'

இப்பொழுது தான் அந்த நவரத்னா அபார்ட்மென்ட் விவகாரம் முடிந்திருக்கிறது.

இவர்கள் குடியேற ஆசைப்பட்ட பிளாட்டில் பேய் ஒன்று இருப்பதாகவும் யாரும் அங்கே குடிபோக முடியாது. போனாலும் நாலு நாளில் மூட்டை தூக்க வேண்டியிருக்கும் என்று பேசப்பட்டது நம்பப்பட்டது.

நீலா துணிந்து கோபால்ராவுடன் குடியேறி அந்த பேயை இரண்டில் ஒன்று பார்த்ததில் நவரத்னா அபார்ட்மெண்டே அதிசயித்தது. பேயெல்லாம் ஒன்றுமில்லை! எல்லாம் சில கடத்தல் ஆசாமிகள் வேலை. அந்த பிளாட்டில் அவர்கள் பதுக்கியிருந்த கடத்தல் சரக்கை காப்பாற்ற அவர்கள் போட்ட நாடகம் அது. நீலா கடத்தல் ஆசாமிகளைப் பிடித்து போலீசில் ஒப்படைத்தது ஜான்சிராணிகளும், லட்சுமிபாய்களும் சாகவில்லை என்று பலரும் பேசும்படி செய்தாள்.

அந்த விவகாரத்தில் துளி அசந்திருந்தாலும் நீலாவுக் மூச்சு நின்றிருக்கும். நல்ல வேளை... தப்பித்து விட்டா தப்பித்தது மட்டுமல்ல கோபால்ராவை கூட கிழிகிழி என கிழித்துவிட்டாள்.

ஏனென்றால் கோபால்ராவ் கூட ஒரு கட்டத்தி பேய்தான் என்று நம்பித் தொடை நடு ஆரம்பித்துவிட்டார். நீலாவின் எதிர்ப்புக்கு தடைபோ ஆரம்பித்துவிட்டார்.

இறுதியில் நீலா ஜெயித்து நிமிர்ந்தபோது அவ நேருக்கு நேர் பார்க்கக்கூட தயக்கமாக இருந்தது.

"இதுக்குபேர்தாம்ப்பா ஜெனரேஷன் கேப்புங்கற என்று நீலா புரட்டி எடுத்துவிட்டாள். அதன்பிறகு எ காண்ட்ரவர்ஷியல் மேட்டரையும் அவள் கோபால்ராவி டிஸ்கஸ் செய்வதில்லை. இதனால் கோபால் ராவுக்கு கூ கொள்ளை வருத்தம். ஒரு முறையாவது நீ மெச்சும்படியாக ஒரு பெரிய விஷயத்தை அட்வென்ச முடிக்க வேண்டும்.

நினைத்துப் பார்க்கிறார் கோபால்ராவ்,

சங்கர சுப்பு விஷயம் அதற்காகவென்றே சிக்கிவிட் மாதிரி தோன்றுகிறது. கவர்னருக்கு நிகரா பொறுப்புகளில் காலங்கழித்த மனிதராக இருந்தத பயனை இந்த விஷயத்தில் பார்த்துவிட வேண்டும்.

நடுவில் நீலாவிடம் மூச்சு விடக்கூடாது,

சங்கர சுப்பு கூட தயங்கித் தயங்கித்தான் விஷயங்களை சொன்னார். அதுவும் கூட அவரது மகளால்தான்.

ரகசியமாக அதே சமயம் சாமர்த்தியமாக செயல்பட முடிவு செய்தாயிற்று.



"அங்கிள் உங்க இன்ப்ளூயன்ஸை பயன்படுத்தி அப்பாவை அந்த சீட்டீங் கும்பல்கிட்ட இருந்து காப்பாத்துங்க..." என்று சங்கர சுப்புவின் மகள் கூட காலிலேயே விழுந்துவிட்டாள்.

அதன் எதிரொலி கமிஷனர் வரை பேசியாயிற்று.

அடுத்து நடப்பதை அறிய கமிஷனர் ஆபீசுக்கு கூட நேரில் போய் வரலாம்-தவறில்லை.

நீலா வரட்டும் டிபன் சாப்பிட்டு விட்டு கிளம்புவோம்.

"நீல்... அப்பாவின் வீர தீர பராக்ரம் பார்க்க போகிறாய் மை டியர் டாட்டர் போகும் வழியில் புஷ்பராஜ் வீட்டுக்கும் போய் துக்கம் விசாரிக்க வேண்டும்.'

ஹூம்!

## 6

பஜாஜ் சன்னி புஷ்பராஜ் வீட்டை தாண்டும்போது நீலாவுக்கு கொஞ்சம் உள்ளே போய் பார்த்தால் என்ன என்று கூட தோன்றியது. ஆனால் வேண்டாம் என்று சன்னியை நேரே செலுத்தும்போது இடைமறிக்கிறாள் மாலா. இறந்துபோன திவ்யாவின் தோழி.

"நீலா கொஞ்சம் நில்லு."

"க்ரிச்ச்ச்"

"என்ன மாலா?"

"ஒன்மினிட்... கொஞ்சம் உன் கூட பேசணும்." மாலாவின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுமுகமாக சாலை ஒரமாக தன் டூவீலரை ஒதுக்கியவள் கூலிங்கிளாசை நெற்றிக்கு ஏற்றிவிட்டுக் கொண்டு மாலாவை ஏறிடுகிறாள்.

"கமான் என்ன விஷயம்?"

''எங்க கிளம்பிட்டே?''

''டிபன் சாப்பிட...''

''ஒரு முக்கியமான விஷயம் பேசணும்.''

''பேசு...''

''இப்படி ரோடு ஓரமா நின்று பேசற விஷயமில்லை நீலா.''

''சரி என் கூட டிபன் சாப்பிட வா. சாப்டுகிட்டே பேசலாம்.''

''ஓ.கே...''-மாலா பின்னால் தொத்திக்கொள்ள வேகமெடுக்க பார்த்தது சன்னி. விடாதபடி பார்த்து கொண்டது டிராஃபிக்.

''மொர்ரீஷியஸ்ல டிரைவ் பண்றது எவ்வளவு சுகமான அனுபவம் தெரியுமா? ரோடும் கழுவிவிட்ட சமைய மேடை மாதிரி அவ்வளவு நீட்டா இருக்கும். இங்க ஒ கிலோ மீட்டர் கடக்க ஒரு மணிநேரம் ஆகுது... என்ன தேசம் இது?''

-டிரைவிங் நடுவே சலிப்பு நீலாவிடம்.

''ஆமா நீலா... இந்த தேசம் மாதிரி ஒரு மோசத்தை இன் பார்க்கவே முடியாது. அந்த மோசத்துக்கு பலிதான் திவ்யா.''

''ஏய் என்ன சொல்றே நீ?''-பிரேக்கடித்தபடி திரும்பிப் பார்க்கிறாள் நீலா.

''சொல்றேன் நீலா. உன்கிட்டதான் சொல்லணும். ஏற்கனவே உன்னை பற்றி கேள்விப்பட்டிருக்கறதால உன்கிட்டே சொல்லியே தீரணும்னுதான் நான் இன்னும் சாகாம இருக்கேன்.''

-மாலா புதிர்போட்டுக்கொண்டே போனாள். நீலா முகம் வெளிறிக்கொண்டே வந்தது. ஒரு வழியாக மாடர்ன்



ரெஸ்டாரெண்ட் வந்தது. இறங்கி உள் நுழைகின்றனர். ஏ.சி. ஃபேமிலி ரூமாக பார்த்து முடங்கவும் செய்கின்றனர். நல்லவேளை கூட்டமில்லை.

''சரி இப்ப சொல்லு. வழியெல்லாம் பினாத்திகிட்டே வந்தியே. என்ன சமாசாரம்.'' நீலா சப்ஜெக்ட்டை துவக்குகிறாள்.

''அதுக்கு முந்தி இதை பார்...''-மாலா ஒரு கவரை நீட்டுகிறாள். அசிரத்தையாக அதை வாங்கும் நீலா கவரை திறந்து பார்க்கவும் உள்ளே சில புகைப்படங்கள்.

வெளியே எடுத்து ஊன்றிப் பார்த்த போது நீலாவுக்கு வியர்த்து கொட்டி விட்டது.

''ஏய்... வாட் ஈஸ் திஸ் நான்சென்ஸ். என்ன இது கொஞ்சம் கூட வெட்கமில்லாம... என்ன மாலா இது கண்றாவி?''

''கண்றாவிதான் நீலா... இந்த நிர்வாணப்படம்தான் திவ்யா உயிரை வாங்கினது. என் உயிரையும் வாங்கப் போகுது.''

''என்ன சொல்றே... தோ பார்-நடந்ததை சொல்-என்ன நடந்துச்சு? இதை யார் எடுத்தாங்க?''

''அவங்க யாருன்னு தெரியாது நீலா. ஆனா இந்த உலகத்துல இவங்கதான் இப்போதைக்கு மிகப் பெரிய அயோக்கியர்கள்.''

''என்ன நடந்துச்சு... விபரமா சொல் முதல்ல.''

''சொல்றேன். விவரமா சொல்ல எதுவுமே இல்லை. நானும், திவ்யாவும் அவங்கப்பா கேமராமேனா ஒர்க் பண்ண ஒரு படத்துக்கு போய்ட்டு ஆட்டோவுல திரும்பிகிட்டிருந்தோம். ஆட்டோ நடு வழியில வேற பாதைல போக ஆரம்பிச்சது. எங்களுக்கு பகீர்னு இருந்தது.

கத்தினோம். ஆட்டோ டிரைவர் ஒரு பொடி மாதிரி ஒண்ணை தூவினான். அவ்வளவுதான் தெரியும். அதுக்கப்புறம் நடந்த எதுவும் தெரியாது. மயக்கம் நீங்கி கண் விழிச்சுப் பார்த்தா இந்த போட்டோவுல இருக்கற மாதிரி இருந்தோம்.

போட்டோ எடுத்தவங்க எதிர்ல! இந்த போட்டாக் களைக் காட்டி மிரட்டினாங்க. அதாவது அவங்க சொல்ற நபர்களோட நாங்க சந்தோஷமா இருந்துட்டு வரணும். பச்சையா சொன்னா விபசாரம் பண்ணனும்னாங்க. இல்லேன்னா மானத்த வாங்குவோம்னாங்க. நாங்க எவ்வளவு கெஞ்சியும் கேக்கலை. இந்த அவமானத்த, அதிர்ச்சியே திவ்யாவால தாங்கிக்க முடியலை. போய் சேர்ந்துட்டா. ஆனா நான் இன்னும் தாங்கிட்டு இருக்கேன். நல்ல வேளை இந்த நிமிஷம் வரை அவங்ககிட்ட இருந்து எந்த அழைப்பும் இல்லை. திவ்யாவோட சாவு அவங்களை ஆச்சரியப்படுத்தியிருக்கணும். என் விஷயத்துல அதனால கொஞ்சம் தயக்கம் காட்றாங்கன்னு நினைக்கிறேன்.''

-மாலாவின் நீண்ட விளக்கம் முன் நீலாவிடம் அடித்தார் போன்ற மௌனம்.

ஓ... என்ன ஒரு கொடூரமான சீட்டிங்!

எத்தனை கீழ்த்தரமான அணுகுமுறை. நீலாவின் நரம்புகள் புடைப்பது நன்கு தெரிகிறது.

''நீலா... இது வெளிய தெரிஞ்சா அவ்வளவுதான். உன்கிட்ட நான் சொல்லக் காரணமே இவங்களை நீ எப்படியாவது பிடிச்சு தண்டிப்பேங்கற நம்பிக்கைதான். உங்கப்பாவும் ஒரு மாஜி அதிகாரி. அரசியல், போலீஸ் இரண்டுலேயும் நல்ல செல்வாக்கானவர்.



இதை எப்படி செயல்படுத்தினா அவங்க மாட்டுவாங் களோ அப்படி செயல்படுத்து. ஆனா எங்களை போட்டோ எடுத்து அசிங்கப்படுத்தின விஷயம் வெளிய தெரியாம பார்த்துக்கோ. ப்ளீஸ்...''

-மாலா பேசிக் கொண்டே போகிறாள். நீலாவிடம் பதிலேயில்லை. மாறாக ஸ்தம்பித்த நிலையின் தொடர்ச்சி.

மாலா பேசி முடித்து விட்டது போல எழுந்து கொள்கிறாள். நிறைய அழுது முடித்திருந்த முகத்தில் இப்போது ஒரு புதிய முடிவின் தீர்க்கம் நன்கு தெரிகிறது.

மெள்ள நழுவ ஆரம்பிக்கிறாள்.

நீலாவிடம் பிரக்ஞை மீளாத அதே நிலை.

மாலாவோ இப்போது ஹோட்டலுக்கு வெளியே சாலையில் பரபரப்பான டிராஃப்பிக்கை வெறித்தபடி,

அந்த டிராஃப்பிக்கிலும் சுமாரான வேகத்துடன் ஒரு கார் வந்து கொண்டிருந்தது.

மாலாவின் கண்ணுக்கு தனக்கான எமனாக அது தெரிந்தது.

சரேலென்று குறுக்கேப் பாய்ந்து விட்டாள்!

'ஆஆஆஆ...' இரண்டாம் உயிர் எழுத்து ஓசையாகி ரெஸ்ட்டாரெண்ட் உள்ளே நீலா வரை கேட்டது.

## 7

''வெல்கம் மிஸ்டர் கோபால்ராவ்...'' உற்சாகமாக வரவேற்கிறார் கமிஷனர் கருணாகரன்.

''தேங்க்யூ கருணாகரன்.''-சீட்டில் அமர்ந்தபடி ஸ்லாகிப்பு கோபால்ராவிடம். உடன் நிறைய வியர்த்த நிலையில் சங்கர சுப்புவுக்கு சீட்டை காட்டுகிறார்.

''உட்கார வரலை சார்... உட்காரவும் என்னால முடியாது. என் விவகாரம் சம்பந்தமா நான் இப்ப உங்களை பார்க்கறது அவங்களுக்கு தெரிஞ்சா அவ்வளவு தான். இருந்தும் நம்பிக்கையோட வந்திருக்கேன்னா என் சினேகிதர் கோபால்ராவ்தான் காரணம்.'' நின்றபடியே புலம்பத் தொடங்கி விட்ட சங்கர சுப்புவை விரக்தியோடு பார்க்கிறார் கமிஷனர்.

''அப்புறம் கருணாகரன். என்ன ஸ்டெப் எடுத்திருக்கீங்க... தெரிஞ்சுக்கலாமா?''-கோபால்ராவ் நேராக விஷயத்தை தொட கமிஷனரிடம் ஒரு நீண்ட பெருமூச்சு-பின் பதில்.

''சார் இது ஒரு பெக்கூலியர் டைப் சீட்டிங். மெட்ராசுக்கு புதுசுக்கூட... இந்த டைப் சீட்டிங்கல இறங்கினவன் பழைய குற்றவாளியாதான் இருக்கணும். குற்றங்கள்ள பழம்தின்னு கொட்டை போட்ட நபராகவும் இருக்கலாம்.

எனக்கு மிஸ்டர் சங்கர சுப்புவோட கோஆபரேஷன் ரொம்ப முக்கியம். ரொம்ப ரொம்ப முக்கியம். இப்ப அவர் தைரியமா இருக்கணும்கறதுதான்....''

''எப்படி சார்... எப்படி சார் முடியும்? உங்களை ஒருத்தன் போட்டோ எடுத்து பிளாக்மெயில் பண்ணினாத்தான் சார் என் நிலைய புரிஞ்சிக்க முடியும் உங்களால... மானம் சார்... அவ்வளவும் மானம் சம்பந்தப்பட்ட விஷயம்.''

''லுக் மிஸ்டர் சங்கர சுப்பு, அந்த போட்டோவால உங்க மானம் போயிடும்னு நீங்க நினைக்கறதே தப்பு.''

''என்ன சார் சொல்றீங்க. அவன் போஸ்டர் போட்டு ஊர் பூரா ஒட்டட்டும்னு சொல்றீங்களா?''

''நான் அப்படி சொல்லலை. அப்படி எல்லாம் அவன் செயல்பட நினைச்சேன்- போஸ்டர் அடிச்சேன்னு செயல்பட முடியாது மிஸ்டர் சங்கர சுப்பு. இந்த நிமிஷம் பிரிண்டிங்



பிரஸ்ஸுக்கு இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்து பிளாக் பண்ணிடுவோம் நாங்க...''

''பண்ணிட்டா அவங்களால போஸ்டர் போட முடியாதா என்ன மிஸ்டர் கருணாகரன்.... சீப்பை ஒளிச்சு வெச்சா கல்யாணம் நின்னுடும்கற மாதிரி இருக்கே உங்க பேச்சு! இது பெக்கூலியர் கேஸ் மட்டுமில்ல. இது ஒருவிதமான வைரஸ் குற்றம். போலீஸ் டிபார்ட்மென்ட்டையும் அட்வான்ஸ் திங்கிங் டெவலப் ஆகிகிட்டிருக்கிற ஒரு கால கட்டம் இது. பளிச்சுன்னு ஒரு ஐடியா பண்ணி அசத்தறத விட்டுட்டு இது என்ன இவருக்கு தைரியம் சொல்லிகிட்டு...''

''சாரி கோபால்ராவ்... நாங்க குற்றவாளிய பிடிக்க இந்த கேஸ்ல மிஸ்டர் சங்கரசுப்பு ஒத்துழைச்சாதான் முடியும்...''

''எப்படி?''

''அவர் பணத்த கொண்டுபோய் கொடுக்கட்டும், அதை எடுக்க அவன் வருவான் இல்லியா. அப்ப அமுழ்த்திடுவோம்.''

''மிஸ்டர் கருணாகரன் இது ரொம்ப பழைய பாணி. எதிரி ஒண்ணும் 1970ல இல்லை. இது 1997. நாம அவனை கண்காணிக்கிறோமோ இல்லியோ அவன் நம்மளை கண்காணிச்சுகிட்டே இருப்பான் உங்க பிரெஸென்சுக்கு தகுந்த மாதிரி அவன் மூவ் பண்ணிடுவான். வேற ஐடியா பண்ணப் பாருங்க...''

''முதல்ல அவங்க அடையாளங்கள சொல்லச் சொல்லுங்க. எங்க டிபார்ட்மென்ட் கிரிமினல்ஸ் ஆல்பத்துல அவன் இருக்கானா பார்க்கச் சொல்லுங்க...''

-கோபால்ராவ் வளைத்துக்கட்டித் தந்த பதில்களால் அந்த கமிஷனர் நெற்றிமேல் நீர் முத்துக்கள். வெளுப்பும் கறுப்புமான மீசை முடிகளில் உணர முடிந்த அளவுக்கு வைப்ரேஷன் வேறு...

-சிறிது நேரம் நெற்றிச் சுருக்குகிறார்.

-பின்னர் "ஆங்...!" என்று சுருக்கம் கலைக்கிறார்.

"என்ன கருணாகரன்?"

"சார் இவர் அஞ்சு பைசா தரவேண்டாம் அவ கோபப்பட்டு வெளியே வருவான். அப்ப நாங் பாத்துக்கறோம். டெலிபோன் லைன்ல இருந்து சக விஷயங்களையும் ட்ரேஸ் பண்ணுவோம்.

மிஸ்டர் சங்கரசுப்பு தைரியமா நீங்க எப்போதும் போல செயல்படுங்க. உங்களை எங்க சிவில் போலீ பாத்துகிட்டே இருப்பாங்க. மற்றத நாங்க பாத்துக்கறோம்."

-இறுதியாக அதைத்தவிர அப்போதைக்கு வேறு முடி எடுக்க முடியாத இயலாமையோடு சங்கரசுப்புவு கோபால்ராவும் கிளம்பினர். சங்கர சுப்புவிடம் உயி துடிப்பே இல்லை.

"கோபால்ராவ்... எனக்கென்ன நடக்கப் போகுதோ?"

"ஒண்ணும் நடக்காது. கருணாகரன் கொஞ்ச மந்தமான ஆள், லீக்கோ கரி மாதிரி. ஆன தீப்பிடிச்சுகிட்டா லேசுல அணையாது. கவலைப்படாதீங்க."

"பிரச்சினை தீர்ர வரை... அந்த நெகடிவ் எல்லாம் கருகரவரை கவலைப்படாம என்னால இருக்க முடியாத கோபால்ராவ் இருக்க முடியாது."

-புலம்பியபடியே வெளியே ஆட்டோவில் ஏறுபவர்களை இரண்டு பேர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

## 8

**ஆ**ஸ்பத்திரி பரபரப்பாக இருந்தது, அள்ளி விழுங்கும் மருந்து வாசத்துக்கு நடுவில் நீண்டு மடங்கும் லஞ்சக் கைகளுக்கு இடையில் உடம்பெல்லாம் கட்டோடு மாலா.



நல்ல வேளை கார்க்காரர் பிரேக்கடித்து சுமாராக மோதி மாலாவுக்கு உயிர் பிச்சை தந்துவிட்டார்.

"அம்மா தாயே... எத்தனை நாளா தாயே என்னை ஜெயிலுக்கு அனுப்ப திட்டம் போட்டிருந்தே? குருப் பெயர்ச்சியில ஜாக்கிரதையா இருக்கணும்னு ஜோசியர் சொன்னான். நான் ஜாக்கிரதையா இருந்தாலும் கெட்ட நேரம் உன்னை கூட்டிகிட்டு வந்து மிரட்டுதே, நான் என்ன பண்ணுவேன்..."

-புலம்பித்தள்ளி அதற்காக டிப்ளமாவும் வாங்கிக் கொண்டுதான் நகர்ந்தார். நீலா குறுக்கில் நுழைந்ததால் எல்லாம் ஓரளவு சுபமாயிற்று. இல்லாவிட்டால் ஏழரை தான்!

ஜி. எச்சிலும் ஏக அலட்சியம்,

சாதாரண ரணத்தைக்கூட எய்ட்ஸ் லெவலுக்கு ஏற்றிச் சொல்லி "இந்த மருந்தும் மாத்திரையும் இல்லைன்னா எமனை எங்களால கண்ட்ரோல் பண்ண முடியாது..." என்று ஒரு கூட்டமே பினாமி மெடிஷாப் பிசினசுக்கு வியாபாரம் தந்து கொண்டிருக்கிறது.

மாலாவைகூட ஒரு செம பார்ட்டியாக நினைத்து விட்டார்கள்.

இது போலீஸ் கேஸ் என்பதில் தொடங்கி தமிழ் சினிமாவில் தோலுரிக்க முனைந்த லஞ்சக் காட்சிகளை அப்படியே செயல்படுத்தி சினிமாவை மிக எதார்த்தமாக்க பார்க்கிறார்கள்.

நீலாவும் விடுவதாக இல்லை.

இப்போதைக்கு அவள் தன்னை முதல்வரின் உறவுக்காரப் பெண் என்று சொல்லி ஒரு மூவ் தந்திருக்கிறாள்.

முதல்வர் வீட்டுக்கும் போன் செய்து தன் மூவ் குறித்து போனை எடுத்த நபர் பதில் போட்டும் வைத்துவிட்டாள்.

"முதல்வருக்கு தெரிஞ்சா கோபிப்பாருங்க..." பதில் குரல்.

"இங்க காட்ற அலட்சியத்த பார்த்தா அதைவிட கோபிப்பார்..."

"அதுக்கு இதுவா வழி?"

"வேற வழிய நீங்க பாக்கற வரை இதுதான் வழி. சாரி."

-போனை முடக்கிவிட்டு மாலாவுடனேயே மன்றாடிக் கொண்டிருக்கிறாள்.

மாலாவும் கண்ணைத் திறந்து நீலாவைப் பார்த்து பேச முயற்சிக்கிறாள்.

"தெரியும். என்னை எதுக்கு காப்பாத்தனே... நான் இப்ப எங்க இருக்கேன்னு கேட்டே ஒரே குத்து. ஏண்டி சாக உனக்கு ஒரு புலம்பல் கேஸ் கார்தானா கிடைச்சுது. முண்டம்... முண்டம்..." நீலாவிடம் நல்ல ஆக்ரோஷமான கோபம்.

"நீலா, என் நிலைய நினைச்சுப் பாருடி."

"கார்ல விழுந்து அடிபட்டா இப்படித்தான். இதுல நினைச்சுப் பார்க்க என்னடி இருக்கு?"

"ஐயோ நான் மானத்தை இழந்தவள்."

"அப்படின்னா பொறக்கற ஒரு ஆண் பெண்ணுக்கு கூட மானம் கிடையாது. தெரிஞ்சுக்கோ."

"ஐயோ... புரியாமப் பேசறியே."

"வாயைத் திறந்தே இஞ்ஜெக்ஷன் சிரிஞ்சாலையே குத்திக் கொன்னுடுவேன். ஏன்டி நீயெல்லாம் பிறந்து வளர்ந்து இந்த மண்ணுக்கு பாரமா..."



"நீ எவ்வளவு வேணா திட்டு, ஆனா என் மனசு சமாதானம் அடையாது."

"தோ பார்... உன் புலம்பல் அப்புறம். உன்னை போட்டோ எடுத்த நாயுங்க எப்படி இருந்தாங்க. அங்க அடையாளம் தெரியுமா, முத அதை சொல். அப்புறமா சாகலாம்."

"நல்ல உயரம், குறுந்தாடி..."

"என்னடி இது... வழக்கமான ரெளடி முத்திரைன்னு ஒரு வரில சொல்லேன். வித்யாசமா ஏதாவது அடையாளத்தை பாத்தியா?"

"வித்யாசமா... வித்யாசமா..."

"ஆமாம். அவன் பீடிதான் பிடிப்பான். வீரப்பா சிரிப்பு சிரிப்பான்கறதுக்கு நடுவுல அந்த வித்யாசம்தான் அவங்கள பிடிக்க உதவி செய்யும்."

"எனக்குச் சொல்லத் தெரியல நீலா..."

"ஸ்டுப்பிட். அவங்கள பிடிக்கணும்னா நீ சொல்லத் தான் வேணும்."

"ஐயோ... நான் என்னத்த சொல்வேன். அதுவும் இப்ப இருக்கிற நிலைல."

"கொஞ்சம் யோசிச்சு சொல் ப்ளீஸ்... எனக்காக"

-மாலா அந்த நிலையிலும் புருவம் கசங்கினாள். பின் எதையோ கண்டுபிடித்த மாதிரி நீலாவைப் பார்த்தாள்.

"என்ன... கமான் சொல்லு."

"எங்களை கடத்தின ஆட்டோவுல ஸ்டியரிங்குக்கு மேல ஒரு ரப்பர் கழுகு பொம்மை இருந்துதுடி." என்றாள்.

"அந்த ஆட்டோவுல எங்க ஏறினீங்க...?"

"வடபழனி ஏ.வி.எம். ஸ்டுடியோ வாசல்ல."

"ஓ.கே... இப்போதைக்கு ஒழுங்கா மாத்திரை மருந்தை சாப்பிட்டு தேரதப்பாரு. மிச்சத்த நான் பாத்துக்கிறேன்."

கிளம்ப எழுந்த நீலாவின் துப்பட்டாவை மாலா பிடித்து இழுக்கிறாள்."

"என்னடி?"

"பார்த்து... இது எங்க மானப் பிரசினை. வெளிய தெரிஞ்சுடப் போகுது... உங்கப்பாவுக்கு தெரிஞ்சா பரவால்ல... ஆனால மத்தவங்களுக்கு தெரியாம..."

"இதோ பார்... இந்த விஷயத்துல நான் எங்கப்பாவுக்கு கூட இதுபத்தி தெரிவிக்க போறதில்ல. ஞாபகம் வெச்சுக்கோ..."

"அப்ப எப்படி அவங்கள பிடிப்பே?"

"இதோ இந்த இரண்டு கையால..."

"முடியுமா,"

"முடிச்சு காட்றேன்."

"நீலா... இட் ஈஸ் ஹைலி ரிஸ்க் போலீஸ் உதவி இல்லாம தனியாளா செயல்பட நீ என்ன விஜயசாந்தியா-நம்ப விஷயம்தான் என்ன தெலுங்கு படமா?"

"இரண்டு பேரும் இல்லை, நான் நீலா. போலீசுக்கு எப்ப போகணும்-எப்படி போகணும்னு எனக்குத் தெரியும். நீ கவலைப்படாதே. டேக் ரெஸ்ட் ப்ளீஸ்..."

-விடுவிடு என்று அந்த குதிரை கிளம்பிவிட்டது.

## 9

**"லொ**ள்... லொள்..."-அதிசயமாக குரைத்தான் கேசவ். அதுவும் யாரைப் பார்த்து...? கோபால்ராவைப் பார்த்து-



கோபால்ராவுக்கு கோபம் கும்பியில் இருந்து சுழன்றியபடி வந்தது.

"அடச்சீ வாய மூடு... உனக்கு எஜமானுக்கும், வெளி ஆளுக்கும் வித்யாசம் தெரியலியாக்கும்..." செருப்பை உதறியபடி உள்ளே நுழைகிறார். திரும்பத் திரும்பி பார்க்கிறார். வெளியே போன நீலா வந்திருக்கவில்லை என்பது தெரிகிறது.

"உஸ்ஸ்... அப்பாடா!" பெருமூச்சு. அப்படியே சோபாவில் மல்லாக்க விழுகிறார். உச்சியில் கூட்டற் குறியாக தொங்கும் ஃபேன் 'ஓடட்டுமா சார்?' என்று கேட்கிறது. தட்டிவிடவும் பெயருக்கு காற்று வருகிறது. வழியும் வியர்வைக்கு போதுமானதாக இல்லை. ஏ.சி. ரூமுக்குள் நுழைந்து சிறிது நேரம் கட்டையை கிடத்த வேண்டியதுதான்.

நுழைகிறார். ஜிலுஜிலுப்பில் ஆஊ என்கிற ஸ்லாகிப்பு. நடுவில் தொலைபேசியிடம் சிணுங்கல். கையில் எடுக்கிறார்.

"ஹலோ கோபால்ராவ்..."

"ஓ... உன்பேர் கோபால் ராவா? மறுமுனையில் ஏகத் தாளமான எதிர்கேள்வி"

"யார் நீங்க... என்ன இது மரியாதை இல்லாம..."

"மரியாதையா... உனக்கா...? ஏய்யா மூடிக்கிட்டு வீட்ல கிடக்காம உனக்கெதுக்கு அடுத்தவங்க விஷயத்துல அக்கறை?"

"லுக் மேன்... எதுவா இருந்தாலும் நேர்ல வா. இந்த பூச்சாண்டியெல்லாம் வேண்டாம்."

"வரேன்... வரேன். உன்னையும் போட்டோ எடுத்து மடக்கலே... போடா-நாங்க அக்மார்க் சீட்டிங் பார்ட்டியே இல்ல. சொடக்..."

-தொலைபேசி முடங்கவும் கோபால்ராவ் வியர்க்...
தொடங்கவும் சரியாக இருந்தது.

-வாசல்புரம் கேசவ் திரும்ப குலைக்கிறான்.

-யாராக இருக்கும்?

-திருடன் வந்தால் தூங்கிக் கொண்டு-எஜமான் வந்... குழைத்துக் கொண்டு... ச்சை! கலியுகத்தில் நாய்க்கு கூ... குணம் மாறிவிட்டதே...

எட்டிப் பார்த்தா நீலா.

சன்னியை மல்லிகைச் செடியை ஒட்டி நிறுத்... கொண்டிருக்கிறாள். கேசவ் விடாமல் குலைந்தபடி... நீ... சட்டையே செய்யாமல் உள்ளே நுழைகிறாள்.

"இப்படித்தான் ஒரு வயசுப் பொண்ணு போனா போ... இடம்-வந்தா வந்த இடம்னு இருக்கறதா. உன் மன... என்ன நினைச்சு கிட்டிருக்கே நீ... டிபன் வாங்கிட்டு வ... இவ்வளவு நேரமா?"-கோபால்ராவ் பேசுமுன் டயலாக்... அவளே பேசிவிடுகிறாள்.

கோபால்ராவிடம் அதை ரசிக்கும் மன நிலையே து... கூட இல்லை. மாறாக மனம் முழுக்க அந்த டெலிபோ... மிரட்டல். முகத்தில் சரியான பெருச்சாளி வெறிப்... நீலாவுக்கு ஆச்சரியமாய் இருந்தாலும் அவளிடம் சற்று பய... இருக்கத்தான் செய்கிறது. அது கோபால்ராவ் நிலைமை... தவறாக புரிந்து கொள்கிறது.

"சாரி டாட்... போன இடத்துல ஒரு விவகா... அதாவது... ஒரு விவாகம்! அதாவது கல்யாணம்-கல்யாண கூட்டம்னு... சொல்ல வந்தேன். அதுல ஒரு தெரிஞ்ச ஃப்ரெண்ட்! பே... ஆரம்பிச்சோம்-பேசிக்கிட்டே இருந்துட்டோம். ஆமா நீங்க... சாப்பிடலை... இதோ டிபன்..."



-கோபால்ராவ் பதில் பேசாமல் வெறிக்கிறார். எங்கே பேச ஆரம்பித்தால் சங்கர சுப்பு விஷயம் லீக்காகி விடுமோ என்று தனக்குத்தானே பயம்! கூடவே அந்த டெலிபோன் மிரட்டலின் உச்சக்கட்டம் வேறு.

நீலா இந்த முறையும் அவர் நிலையை பார்த்து தவறாக புரிந்து கொண்டு எக்ஸ்யூஸில் வழிய ஆரம்பிக்கிறாள்.

"சாரி டாட்... டிபன் சாப்பிடுங்க. நான் ரொம்ப மோசம், ஊர் சுத்தி. பொறுப்பில்லாதவ. ஆம்பளப் பொம்பள! வறட்டு தைரியம் எதுலையும் பிடிவாதம்-மெட்ராஸ் பாஷைல சொன்னா சரியான ரப்ச்சர் பிடிச்ச பொண்ணு. சரிதானே? ஒத்துக்கறேன்.

இனிமே 'வெள்ளிக்கிழமை விடியும் வேளை வாசலில் கோலம் இடுவேன்' டாட்... பி. சுசிலா பாட்டு மாதிரி.

'சிட்டுக்குருவிக்கென்ன கட்டுப்பாடு-தென்றலே உனக்கெது சொந்த வீடுன்னு' நம்ம மாஜி சி.எம் மாதிரி திரிய மாட்டேன் டாட்... சிரிங்க டாட்... ப்ளீஸ் டாட்..."

-சிரித்து விடுகிறார் கோபால்ராவ். சகலத்தையும் மீறி இதயம் சிலிர்க்கும் சிரிப்பு. நீலா ஜெயித்து விட்டாள்.

"சரிசரி டிபனை கொண்டா..." வாங்கி பிரிக்க ஆரம்பிக்கிறார். அப்பாடா! நீலாவிடம் மூச்சில் தளர்வு. அப்பொழுது பார்த்து திரும்பவும் தொலைபேசியிடம் 'வா கோபால்ராவ்-என்கிற கிண்கிணி அழைப்பு.

இட்லி விழுங்கின வாயோடு ஒரு பாய்ச்சல். ஆனால் நீலா முந்திக் கொண்டாள். காது மடலில் குரலைக் கேட்டபடி ஹலோ சொன்னாள்.

"யார் நீலாவா. நான் சங்கர சுப்பு பேசறேன். உங்கப்பா இருக்காரா?"

"இருக்கார். நீங்க எப்படி இருக்கீங்க அங்கிள்."

"என்னமோ இருக்கேன்மா. ராகுவும் கேதுவும் பிடிச் ஆட்றாங்க."

"யார் அவங்க...? உங்க பேரப் பசங்களா?"

"விளையாடதம்மா. அப்பாகிட்ட போனை கொடு."

-ரிசீவரை கோபால்ராவிடம் தருமுன் கோபால்ரா கழுகு போல் முன் வந்து பிடுங்கத் தயாராக நிற்கிறார்.

"என்ன டாட் இது. எதுக்கு இப்படி பறக்கறீங்க. ஏ உலக ரகசியம் பேசற மாதிரி..." சலித்தபடியே ரிசீவ தருகிறாள்.

"ஹலோ சங்கர சுப்புவா... நான் கோபால்ராவ்."

"கோபால்ராவ்... என்னங்க இது. அந்த நாய் திரும் போன் போட்டு மிரட்றான். நாம போலீசைப் பார்த்துட் வந்தது அவனுக்கு தெரிஞ்சு போச்சு. ஐயோ-அவங்களுக் தலைமுடியெல்லாம் கூட மூளைங்க."

"யோவ்... என்னய்யா இது பாராட்றியா இல் கவலைப்படறியா? எனக்கும் போன் வந்துச்சய்யா."

"என்னன்னு...?"

"உன்னை மாதிரியே என்னையும் போட்டே எடுத்துடுவாங்களாம்."

"பாத்தீங்களா நான் சொல்லலை. சார் உங்கபே கேட்டு நல்ல மாட்டிக்கிட்டோம்னு நினைக்கறேன் நான்

"அவசரப்படாதய்யா. பிறகு பேசறேன். போனை வை

-நீலாவுக்காக மிக சுருக்கமாக பேசி போனை முடக்கினார். நீலா உற்றுப் பார்த்துக் கொண்டேயிருந்தா

"என்ன டாட்... என்ன ஏதோ போட்டோ அ இதுன்னு..."



"ஒண்ணுமில்லம்மா... ஒண்ணுமில்லை. அது வந்து ஒரு ஃபேர்வெல் பார்ட்டி. அதுல போட்டோ எடுக்கணுமாம். அதான்!"-கோபால்ராவிடம் சுமாராக பொய் சட்டென்று அகப்பட்டு வெளிப்பட்டது.

"அதுக்கு எதுக்கு இத்தனை பதட்டம்?"

"பதற்றமா. ச்சேச்சே! அதெல்லாம் ஒண்ணுமில்லை. நீ போய் உன் வேலையைப் பார். என்ன?"

நீலா நின்று ஆழமாக ஒருமுறை முறைத்துவிட்டு விட்டுப் பிடிப்போம் என்கிற மாதிரி அங்கிருந்து நகர்ந்தாள்.

"லொள்... லொள்..."-திரும்பவும் குலைப்பு. எல்லாம் அந்த கேசவ்தான். எட்டிப் பார்க்கிறாள்.

"சாமி நான்தான் காய்க்காரி. இந்த நாய் என்ன தினம் வர்ற என்னை பார்த்துக்கூட குலைச்சுகிட்டு..."-அவளிடம் உக்ரமான புலம்பல்.

-நீலா விறுவிறுவென்று வாசப்பக்கமாய் நடக்கிறாள்.

-கேசவை பார்த்து முறைக்கிறாள்.

-அது செல்லமாய் வாலாட்டுகிறது.

"டேய்... வரவர உனக்கு திமிர் ஜாஸ்தியா போயிடிச்சு. உனக்கு இனிமே இங்கே இடம் இல்லை." என்று அதன் சங்கிலியை அவிழ்த்து வெளியே தள்ளி விடுகிறாள்.

போகாமல் தேங்குகிறது. தேன்விழிகளால் 'வாணாம நீலா ப்ளீஸ்! என்று மனு போடுகிறது.

"இப்ப போறியா இல்லியா?"

("மாட்டேன். வெளியே போனா இந்த மாதிரி தூங்க முடியுமா?") "லொள்... லொள்ள்ள்ள்... லொள்..."

"போ. போய் தெருவுல கிடந்து சாகு. உன் செட்டு ரவுடி நாயுங்ககிட்ட கடிபடு. அப்பதான் இந்த நீலா அருமை உனக்குத் தெரியும்..."

"லொள்ளள்ள்... லொள்..." ("அப்ப போயிடுவேன்

"ஒழிடான்னா..."

-பிடித்து தரதரவென்று இழுத்து வெளியே தள்ளி கேட்டை சாற்றிவிட்டு உள்ளே நுழைகிறாள். காய்க யிடம் பரவசம்.

"தாயி... உனக்குதான் என் வார்த்தைங்க மேல எல் மதிப்பு. நான் சும்மா பேச்சுக்கு சொன்னேன்."

"கோவிச்சுக்காதே... நாப்பது ரூபா..."

"கேரட்."

"முப்பது ரூபா."

"வெண்டைக்கா..."

"சும்மிதான்."

"எவ்வளவு?"

"இருபது ரூபா."

"இருபது ரூபா-சும்மியா?"

"தக்காளிக்கு இது பாதி தானே...?"

"எழுந்திரு... எனக்கு காயே வேணாம்."

"ஐயோ தாயி-வாங்குன விலைய சொன்னேன். லாபி வைக்கலை. மழையே இல்லை தாயி. மனுஷங்களே ஜாஸ்தியாயிட்டே போறாங்க-என்னத்த பண்ண"

-ஹூம்... பெருமூச்சுடன் திரும்பவும் கோபால்ரா கூடையுடன் வந்து காய்கறிகளை போட்டுக்கொள் ஆரம்பிக்கிறார்.

"இப்படியே போனா தக்காளிக்கு பதிலா ஆப்பிளை போட்டு குழம்பு வைக்க வேண்டியதுதான்" என்றி நக்கலோடு நீலா சிரித்தபடி உள்ளே நுழைபவள் தன்



அறைக்குள் போய் படுக்கையில் குத்துக்காலிட்டு அமர்ந்து கொள்கிறாள்.

மாலாவிடம் பேசிய பேச்சு இப்பொழுது ரீப்ளே ஆகிறது. சற்றுமுன் நிலவிய அந்த இளக்கமான நிலைகள் மாறிப்போகிறது. மனதில்கூட ஒரு தீர்மானம்.

## 10

தக்காளி ரசம் ஈயப்பாத்திரத்தில் நன்றாக கொதிக்க தொடங்குகிறது. வாசனை மூக்கை இனி அறுத்தெறிந்தாலும் தப்பில்லை பிறந்த பயன் எடுத்தாயிற்று என்கிறது.

கொதிப்பது ரசம் மட்டும்தானா என்ன?

கோபால்ராவும் தான், நடுவில்.

எட்டி எட்டி பார்க்கிறான். நீலா இதற்குள் குளியல், தலையில் வாஷிங்மெஷினில் துணி துவைத்தல், இஸ்திரி என்கிற வேலைகளை முடித்து விட்டிருக்கிறாள்.

நடுவில் இரண்டு முறை டெலிபோன் அலறியது.

போய் ஹலோ நீலா என்று சொன்னவுடன் ஏனோ செத்துப் போனது. முகத்தில் அதன் காரணமாக துளி கலவரம். யாராக இருக்கும்? எதற்காக இருக்கும்? என்கிற கலவரம். தப்பித்தவறி மாலா போன் செய்து கோபால் ராவ் அட்டெண்ட் செய்தால் சகலத்தையும் சொல்லித் தொலைக்க வேண்டி வருமோ என்கிற பயமும் கூட...

அப்புறம் ஒழிந்தது கிருஷ்ணகிரி கேஸ்தான்.

கோபால்ராவ் உபதேச ராவ் ஆகிவிடுவார்.

'பொண்ணு பொண்ணா நடந்துக்கணும்' என்பதில் தொடங்கி 'ஊர்வம்பு நமக்கெதற்கு?' என்று ஒரு ரவுண்டு

வரக்கூடும். மீறிக் கொண்டு போய் அந்த சிட்டிங் புலி
விஷயத்தில் எதுவும் செய்ய முடியாது போய் விடும்.

பாவம் மாலா. அவளுக்கு ஏற்பட்ட நிலை இன்னொ
பெண்ணுக்கு ஏற்படக்கூடாது. அந்த நாய்களை உண்
இல்லை என்று பார்த்துவிட வேண்டும். பேக்கு முன்
போல ஏ.வி.எம். அருகே போய் நின்று கொ
வேண்டும். ரப்பர் கழுகு தொங்கும் ஆட்டோவாயே
தேடிக் கண்டுபிடித்து சவாரி செய்ய வேண்டு
விபரீதமானால் ஓடும் ஆட்டோவில் இருந்து குதிப்பு
ஒன்றும் பெரிய விஷயமில்லை. இல்லாவிட்டா
அப்படியே ஓட்டும்நபரின் பின் பிடறியில் ஒரு தோ
வர்மத்தாக்கு நடத்த வேண்டியதுதான்.

தேடிப்போய் தேசிகாச்சாரிடம் கற்றுக் கொண்
கலைக்கு ஒரு வேலை கொடுக்க வேண்டாமா? பின் அ
ஆட்டோவை அப்படியே ஓட்டிக் கொண்டு போல்
ஸ்டேஷனுக்குப் போய் கமிஷனரிடம் விஷயத்தை சொல்
டிரைவருக்கு அல்வா கொடுக்கத் தொடங்கினால் மற்றவை
சுபமாக முடிந்து விட்டு போகிறது.

நினைத்துக் கொள்கிறாள்.

இப்படி தனக்கு தானே ரகசியமாக நினைத்
கொள்ளும் உரிமை நீலாவுக்கு மட்டும் தானா என்ன
கோபால்ராவுக்கு கிடையாதா என்ன?

'டேய் வாங்கடா... வந்து பாருங்க... உங்களை உண்
இல்லைன்னு பண்ணிடறேன். என் சர்வீஸ்ல நான் எத்தனை
கிரிமினல்களை பார்த்துருப்பேன்.

என்னையே நியுடாக்கி போட்டோ எடுப்பியா?

யாருடா பார்ப்பா அந்த கண்றாவியை?



நான் என்ன காட்டிகிட்டு நிப்பேனா...? கமிஷனர்
கருணாகரன்... இந்த நிலைல ஒரு ஐடியாவோட நீங்க
நடக்கலை தெரியும் சேதி...

இப்பவே போன் பண்ணி வீட்டை சுத்தி காவல் போடச்
ஆனா நீலா ஏன் எதுக்குன்னு கேப்பா!

பேசாம சொல்லிவிடுவோமா...?''

''நோ... கூடாது. நீலா இந்த விஷயத்துல உன்
அப்பாவோட சாமர்த்தியத்தை பார்த்து நீ வாயை பிளக்கப்
போறே பாரு.

கோபால்ராவ் ஆல்வேஸ் அலெர்ட். கோபால்ராவ்
ஆல்டைம் பிரிங் அண்ட் ச்யூட்...

சரி...சரி... இப்படி நாமே சர்டிபிகேட் கொடுக்கறது
பிறகு. இப்ப என்ன பண்ணலாம்?

அடுத்து போன் வரட்டும் யோசிப்போம்.

இப்போதைக்கு தக்காளி ரசத்தை ஒரு பிடி பிடிப்போம்!

யோசித்து முடிந்த மாதிரி தட்டைக் கழுவ
ஆரம்பிக்கிறார்.

''நீலா சாப்பிட வா... அழைக்கிறார்.

''ஷ்யூர் டாட். நல்லபசி எனக்கும்.''

''சாப்பிட்றதோட அப்படியே ரசம் எப்படி
வைக்கறதுன்னும் கத்துக்கோம்மா.''

''அதுக்கென்னா கத்துக்கிட்டா போச்சு ஆமா ஏம்ப்பா
ஒரு சமையல்காரி வெச்சுக்கமாட்டேங்கறீங்க?''

''எத்தனை தடவைதான் சொல்றது. உங்கம்மா கைபட்ட
பாத்திரங்களை இன்னொருத்தி தொட்றதுல எனக்கு
உடன்பாடு இல்லம்மா...''

''அப்பா பாத்திரத்துக்குமா கற்பு?''

''நிச்சயமா...''

''நெஞ்சை தொட்டுடீங்கப்பா'' என்றபடி தட்... டைனிங் டேபிளில் போட்டுக் கொள்ள கொதிக்... பொன்னிப் பச்சையரிசியின் மல்லிகைப்பூ போன்ற சாத... கமகமக்க பரவுகிறது. பின் பசு நெய் மேல் விழுந்து உருகி... கரைகிறது. ரசம் அடுத்து துள்ளிப் பாய்கிறது.

மனிதப் பிறப்பெடுத்ததே இப்படி ரசம் சாத... சாப்பிடத்தான் என்றுகூட ஒரு நினைப்பு தோன்றும்போ... ஹாலில் அலறியது டெலிபோன்.

நல்லவேளை... முந்திக்கொண்டார் கோபால்ரா... நீலாவுக்கு தெரியாமல்!

''கோபால்ராவ்... நான் கமிஷனர் பேசறேன். உங்களுக்... மிரட்டல் போன் வந்திச்சாமே!''

''ஆமாம் சார்.''

''கவலைப்படாதீங்க. அவங்களால ஒண்ணும் பண்ண... முடியாது. ஒரு அரைமணி நேரத்துல உங்க வீட்டுக்... புரொட்டக்ஷன் போட்டுடறோம்.''

''ஐய்யய்யோ வேண்டாம் சார்.''

''ஏன் வேண்டாம்கறீங்க...?''

''வேண்டாம் சார். பாக்கறவங்க என்னவோ ஏதோன்னு... நினைப்பாங்க அதோட இதெல்லாம் பிராப்ளம் தீராது.''

அவங்க ரொம்ப க்ளவரான குரூப். அவங்க எப்படியும்... நான் வெளிய போனா என்னை பிடிக்கலாம். ஆகையா... நான் வெளிய போகப்போறது கிடையாது. நீங்க சங்... சுப்புவை போக விட்டு பிடிச்சுப்பாருங்க.''



''சரி... ஜாக்கிரதையா இருங்க. எதுன்னாலும் எனக்கு போன் பண்ணுங்க.''

''நிச்சயமா...'' போனை முடக்கிவிட்டு டைனிங் ஹால் பக்கம் நடக்கிறார். நீலா ரசத்திடம் தன்னை மறந்திருக்கிறாள்.

''அப்பா நீங்க போன ஜன்மத்துல நளனா பொறந்துருக்கணும் என்னம்மா இருக்கு தெரியுமா ரசம்?'' என்று புகழ ஆரம்பிக்கிறாள்.

''புகழ்ந்தாகணுமே... அப்பொழுதுதானே வெளியில் கிளம்ப முடியும்?''

''ஆமா... தக்காளி ரசம் ஓ.கே. வேப்பம் பூ ரசம், மிளகு ரசமெல்லாம் நல்ல வைப்பீங்களா?''

''வேப்பம் பூக்கு எங்கம்மா போக...?''

''இதோ இப்பவே போய் வாங்கிட்டு வந்துட்றேன்.''

''ஆகக்கூடி வெளியே போகணும். அதுக்கு வேப்பம்பூ ஒரு காரணம் அப்படித்தானே?''

''பேச்சே... அப்படியெல்லாம் இல்லை. நான் போகலைப்பா. போகலை.'' கன்னத்தில் போட்டுக் கொள்கிறாள் நீலா.

கோபால்ராவுக்கு சுருக்கென்றது. அப்படியே கன்னிமராவுல An Ancient Animalsங்கற புத்தகத்தை டயம் ஆனாலும் பரவால்ல தேடி எடுத்துக்கிட்டு வா...'' சொல்லிவிட்டு 'அப்படி ஒரு புத்தகமே கிடையாது' என்று தனக்குத்தானே சொல்லிக் கொள்கிறார்.

நீலாவிடம் பயங்கர உற்சாகம்.

அவசர அவசரமாக அள்ளி விழுங்கிவிட்டு ஜீன்ஸ் டீ ஷர்ட் என்று உருமாறுகிறாள். சன்னியை தவிர்க்கிறாள்.

வாசப்பக்கமாய் இறங்கும்போது வெளியேயே சோகமாய் நின்று கொண்டிருந்தது கேசவ்.

“என்ன சார்... ஊருக்குள்ள சுத்தி வர இஷ்டமில்லியா? கிடங்க. இங்கேயே கிடந்து சாகுங்க...” என்றபடி கடந்துபோன ஒரு ஆட்டோவை தடுத்து நிறுத்தி ஏறிக் கொள்கிறாள்.

“எங்கே போகணும்?”

“வடபழனி ஏ.வி.எம். ஸ்டுடியோ வாசல்.”

ஆட்டோ சீறத் தொடங்கியது. கேசவ் கொஞ்ச தூரம் பின் ஓடிவிட்டு வந்து திறந்து கிடக்கும் கதவு வழியாக உள் நுழையப் பார்த்தது.

முந்திக் கொண்டார் கோபால்ராவ்.

“டேய் இது என்னோட ரவுண்ட், அப்படியே ஓடிப் போயிரு. உள்ள வந்தே தெரியும் சேதி...” கருத்தோடு வாயில் கதவை தாழிடுகிறார்.

## 11

ஏ.வி.எம். ஸ்டுடியோ வாசல்!

கார்த்திகை அடைமழையில் சாலையெல்லாம் கற்பழிக்கப் பட்டிருந்தது.

ஜனக்கூட்டம் கட்டி ஏறிக் கொண்டிருந்தது.

நீலா பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருக்கிறாள்.

கடந்து போன ஒரு காரில் நடிகர் அப்பாஸ் தெரியவே பக்கத்தில் இருந்த ஒரு பெண் கன்னத்தில் போட்டுக் கொள்ளாத குறை. ஹீராகூட காற்றாடப் போவது பார்த்து நிறைய இளவயது விடலைகள் ஜொள்ளு விடுகின்றனர்.



நீலாவுக்கு சிரிப்பு வந்தது. திரும்பினால் காதல் கோட்டை அஜீத் பெரிய பேனர் வடிவம் எடுத்து நின்றபடி ‘ஆல்த பெஸ்ட்’ நீலா என்கிற மாதிரி பார்க்க ‘எங்கே அந்த ஆட்டோ?’ நீலாவின் பார்வை துழாவுகிறது.

கிட்டதட்ட வைக்கோல் போரில் குண்டூசியை தேடுகிற நிலைதான்.

பரந்த இந்த மெட்ராசில் ஆயிரமாயிரமாய் ஓடும் ஆட்டோவில் எது அந்த ஆட்டோ? ரப்பர் கழுகு ஸ்டியரிங் மேல் தொங்குமாமே... கால் கடுக்க நின்றபடி போகும் வரும் ஆட்டோக்களை வெறிக்கிறாள்.

ஒரு ஆட்டோ வந்து நின்றது.

“ஆட்டோ வேணுமா?” கேட்டது.

“ஸ்கூட்டர் நிறுத்தவே இடமில்லை. இதை வேற வாங்கி நான் எங்க நிறுத்த?” பதிலில் ஆட்டோ டிரைவரிடம் நடுமூக்கு நசுங்கிய மாதிரி ஒரு வேதனை. முறைத்தபடியே பின் வாங்கினார். சர்புர் என்று பின்னுக்கு எடுக்கும்போது தெரிந்து விட்டது அந்த ரப்பர் கழுகு.

“ஹலோ... ஏய்... ஆட்டோ...” அலறினாள் நீலா.

“வேணாம் தாயே... கூப்பிட்டு எதாவது எகத்தாளமா சொல்வே நீ பஜாரி...” பேசியபடியே கியர் மாற்றுகிறான் ஆட்டோ பறக்கிறது.

‘ச்சை! இப்படி கைக்கு எட்டியதை மிஸ் செய்து விட்டோமே...’ சலிப்புடன் கை பிசைக்கிறாள் நீலா.

நேரம் ஓடிக் கொண்டிருக்கிறது.

கடிகாரம் பார்க்கிறாள். மணி மூன்று!

அதே மூன்று மணிக்குதான் கோபால்ராவ் வீட்டு முன் அந்த கார் நிற்கிறது. இறங்குகின்றனர். இரண்டு பேர்.

ஒருவன் வெளியே நின்று கொள்ள இன்னொருவன் உள் ஓடுகிறான். தபதபவென்று வாசல் கேட்டை திறந்தபடி ஓடுகிறான். காலிங் பெல்லை அழுத்திவிட்டு அழுவது போல் முகத்தை வைத்துக் கொள்கிறான்.

கதவு திறக்கிறது.

கரண்டியுடன் கோபால்ராவ் பிரசன்னம்.

"யார் நீங்க... என்ன வேணும் உங்களுக்கு?"

"யோவ் சமையல்காரா... இதுதானே அம்பாசடர் கோபால்ராவ் வீடு?"

"ஆமா... அதுக்கென்ன?"

"போய்யா... போய் அவரக் கூப்பிடு. அவரோட மகளுக்கு ஆக்சிடென்ட் ஆயிடுச்சுய்யா..."

"என்னது என் மகளுக்கு ஆக்சிடென்ட்டா?"

"உன் மகளா... நீங்க தான் அம்பாசடாரா?"

"ஆமாம்ப்பா... நீ என்னப்பா சொல்றே. ஆக்சிடென்ட் அது இதுங்கிறியே?"

"சார் உங்க மகதானே நீலா?"

"ஆமாம்ப்பா... என் ஒரே மகள். என் உயிரே அவதானேப்பா."

"அப்ப கிளம்புங்க. அப்புறம் நீங்க அவ இரண்டு பேரும் செத்து வைக்கப் போறீங்க."

"எப்படிப்பா ஆச்சு ஆக்சிடென்ட்... எங்க ஆச்சு?"

"கோபால்ராவ் பதறும் போது திறந்த கதவு வழியாக கேசவ் உள் நுழைந்து விட்டது, நின்று கொண்டு ரசனையோடு இருவர் பேச்சையும் பார்த்தபடி நாவை தொங்கவிட்டு இளைக்கிறது.



கோபால்ராவ் கேள்விக்கு அவனிடம் படபடப்பான பதில்.

"சார் கிளம்புங்க... போகும்போது பேசிக்கலாம்..." என்றபடி அவன் ஓடுகிறான். கரண்டியை விட்டெறிந்து விட்டு பூட்டிக் கொண்டு கிளம்புகிறார் கோபால்ராவ். செருப்பு முதல் சட்டை பட்டன் வரை எல்லாவற்றிலும் ஏறுக்கு மாறான அணிதல்.

காரில் பாய்ந்து ஏறுகிறார். ஏறும்போதே "நீங்க யாரு... ஆக்சிடென்ட் எங்கே? என்று திரும்பக் கேட்கிறார்.

"உம் மௌண்ட் ரோட்ல!"

"மை காட்... நல்ல அடியா?"

"ஆமா பாத்தீங்கன்னா திறந்த வாய மூட மாட்டீங்க..."

"அவ இத்தனைக்கு டூ வீலர்லகூட போகலையே...?"

"சார் நேரம் சரியில்லைன்னா நடராஜா சர்வீஸ்லையே எல்லாம் நடக்கும் சார்..." சிட்டாக பறக்கும் காருக்குள் அவர்களிடம் பேசி வைத்துக் கொண்டது போல் பதில்கள். ஒரு விஷயம் மட்டும் அவர்கள் நினைப்புக்கு மாறாக... பின்னாலேயே கேசவ் நாயின் இலக்கணம் போல ஓடி வந்துக் கொண்டிருந்தான்!

கார் டிராஃபிக்கில் தேங்கியும் திணறியும் ஓடும் விதத்தில் ஒருவகை சுதந்திரம்.

"ஆமா... எதுக்கு இத்தனை வேகம். நீங்க யார்னு சொல்லவே இல்லையே..." அழாக்குறையாக பேசுகிறார் கோபால்ராவ். அருகில் இருப்பவன் சுகந்தமாய் அதற்காக சிரிக்கிறான்.

"என்னப்பா நான் பதறிக்கிட்டு கேக்கறேன்-நீ சிரிக்கறியே?"

''ஏய்ய்... யார் நீங்க...?''

''உம்ம்... உன்னோட வியாபாரம் பண்ண
போறவங்க.''

''என்ன சொல்றே நீ?''

''வியாபாரம்னா தெரியாது... அதாம்பா பிசினஸ்.''

''நீ நீங்கதான் அந்த டெலிபோன் மிரட்டின திருட்டு பசங்களா. வேண்டாம். ஹெல்ப்... ஹெல்ப்...'' கோபால்ராவ் கத்த ஆரம்பித்தார்.

சட்டென்று அவன் பாய்ந்து வாயைப் பொத்தினா ஒரு துப்பாக்கியை வேறு நேரே நீட்டினான்.

''வாயத் திறந்தே சுட்டுப் பொசுக்கி புடுவேன். நீ பெ புள்ளியா இருந்தா அது வெளில, எங்ககிட்ட சிக்கிட்டா பெரிய கரும்புள்ளிதான். ஞாபகம் வெச்சுக்கோ...''

''டேய்... இதெல்லாம் மகாபாவம்.''

''பாவமாவது புண்ணியமாவது. இந்த உலகமே சாமார்த்தியத்துலதான்யா செயல்பட்டுகிட்டிருக்கு இதோ பார் தெரிஞ்சோ தெரியாமலோ அந்த சங்கரசுப் விஷயத்துல சூரன் மாதிரி நுழைஞ்சு இப்ப எங்ககிட் மாட்டிக்கிட்டே. எங்களுக்கு உங்களை மாதிரி ஆட்க நிறைய தேவை. இப்ப உன்னைக் கூட நிர்வணமாக் போட்டோ எடுக்கப் போறோம். அதை வெச்சு பணத் கறந்துகிட்டே இருப்போம். உன் போலீசாலையோ இல்லை யாராலையுமோ எங்களை அசைக்க கூட முடியாது, ஏன்னா நாங்க ஒவ்வொரு நாளும் ஒவ்வொ இடத்துல இருப்போம். ஒரே நபர்கள் இந்த விஷயத்து ஈடுபடறது கிடையாது. நாங்க ஒரு உலகம். அதே போலீஸ்ல எங்களை பத்தி எந்த எவிடென்சும் கிடையாது ஆகையால் எங்களை போலீஸால சுலபமா ஐடென்டிஃபை பண்ண முடியாது.''



சுருக்கமா சொன்னா நாங்க ஒரு டைப்பான நக்சலைட்ஸ்.

காசுல கொழுத்த மேல் நாட்டு பணக்காரங்களான உங்களை உறிஞ்சப் பிறந்த அட்டைகளும் ஆக...

இந்த பிசினஸ்ல நாங்க போட்டுருக்கிற முதலே தைரியமும் பிளானிங்கும்தான்.

அவனது விளக்கத்திலே கோபால்ராவ் திறந்த வாயை மூடவில்லை. காரும் கூட ஒரு மதில் சுவரைத் தாண்டி உள் ஒரு தனி பங்களா முன் நின்றது.

''உம் இறங்கு...'' துப்பாக்கியுடன் அவன் மிரட்ட நடுங்கியபடியே கோபால்ராவ் இறங்குகிறார்.

''இந்த மாதிரி நிறைய சினிமால பார்த்துருக்கேன். ஆனா நிஜத்துல எனக்கே இப்படி நடக்கறத நினைச்சா... ஹூம்ம்...''

''புலம்பாமா உள்ள நட. இன்னும் கொஞ்ச நேரத்துல அந்த சங்கரசுப்புவையும் இங்க கொண்டு கிட்டு வந்துடுவோம். போலீஸூக்கு போனதுக்கான ஒரு அர்ச்சனை இருக்கு அவனுக்கு.''

''ஐயோ அவர் போகலை. நான்தான் கூட்டிக்கிட்டு போனே.''

''இருக்கலாம். ஆனா அந்த ஆளுக்கு புத்தி எங்க போச்சு? எங்ககிட்ட இதுவரை எவ்வளவோ பேர் மாட்டியிருக் காங்க. ஆனா யாரும் போலீசுக்கு போனதில்ல. பெரிசா ஒரு செட்டில்மென்ட் பண்ணிகிட்டு நெகடிவை வாங்கிட்டு போயிருக்காங்க. உன் தோஸ்த்தான் மீறிட்டான். இருக்கட்டும். இருக்கட்டும் அவனையும் இங்க கொண்டு வந்ததுக்கு பிறகு நாளைக்கு வேளச்சேரி பங்களாவுல வெச்சு உங்களை நிர்வாண நடனம் ஆடவிடலை...''

"ஒரு சவாலை போல் அவன் பேச கோபால்ரா
நிஜமாலுமே கேவிக்கேவி அழ ஆரம்பித்துவிட்டார்.

கேசவ் கூட அந்த பங்களா முன் தன் எஜமா
காணாத தவிப்புடன் நின்று கொண்டிருந்தது. நெடுந்தூர
ஓடி வந்த களைப்பில் நாக்கு கூடுதலாக வெளியே வந்
எச்சில் ஏதோ சரியாக மூடாத பைப்பின் தண்ணீரை
போல கொட்டிக் கொண்டிருந்தது.

கேசவிற்கு இந்த மாதிரி சேசிங் எல்லாம் புதிது. தன்னா
இப்படி ஓட முடியும் என்பதே கூட அதற்கு இன்றுதா
தெரிந்திருக்கும்.

தெரிந்து என்ன பயன்?

ஆளைக் காணோமே... திரும்பி ஓட ஆரம்பிக்கிறா
கேசவ்!

## 12

நின்று, நின்று பார்த்து சோர்ந்து போய் வி
திரும்பலாம் என்று நினைக்கிறாள் நீலா. சென்னை நகரி
ஒரு பிரதான பஸ் ஸ்டாப்பில் இதற்கு மேல் நிற்பது ஆபத்
என்கிற எல்லையே தொட்டு விட்டாள்.

"இன்னாமே எவ்ளோ ரேட்டு... டாபர் லாட்ஜா இல்
ஸ்டார் ஓட்டலா?" என்று ஒருவன் கேட்டே விட்டான்.

"உம்... ஸ்விட்சர்லாந்து..." என்று அவனுக்கு பதிலு
சொல்லி விட்டாள். ஆனாலும் கூசுகிறது. இனியு
தொடர்ந்தால் தப்பான திசைக்கு தள்ளப்பட்டு விடுவோ
என்பதும் தெரிகிறது.

"ஆட்டோ..." ஒரு ஆட்டோவை பிடிக்கிறாள். மீட்டா
போடாமலே ஓட்டப் பார்த்தவன் எதிரில் மீட்டரை தட்டி



விடுகிறாள். அவன் முறைக்கிறான். பிரேக்கடித்து
நிறுத்துகிறான்.

"ஏன் நிறுத்திட்டே?"

"எதுக்கு மீட்டர் போட்டீங்க..."

"அது எதுக்கு பூஜை பண்ணவா...?"

"எனக்கு கட்டுப்படியாகாது..."

"எனக்கும் தான்."

"அப்ப நடந்து போம்மே..."

"போலாம்... அதுக்கு முந்தி போலீசுக்கு போவோமே..."

"ஏய்... என்னா படா பஜாரி மாதிரி பேசிக்கிட்டு... நான்
யார் தெரியுமா?"

தகராறு ஆரம்பமாகி விட்டது.

"பாத்தா சினிமா ஸ்டாராட்டம் கீறே... ஒரு அஞ்சு பத்து
கூட போட்டு கொடுத்தா என்னா?"

"நீ கூடதான் பாத்தா ரஜினி பாட்சா மாதிரி இருக்கே.
இரக்கமுள்ள மனசுக்காரண்டா'ன்னு ஓட்ட வேண்டியது
தானே?"

ஆட்டோக்காரன் முழிக்கிறான். வேறு வழியில்லாமல்
ஸ்டார்ட் செய்கிறான். அங்கே கோபால்ராவ் படும்பாடு
தெரியாமல்...

ஆட்டோகாரனுக்கு கூடுதலாகவே ஒரு பத்து ரூபாயை
தந்து அவன் வாயின் நிரம்பிய காவிப் பற்களை பார்த்தபடி
திரும்புகிறாள். வாசலிலேயே ஏக்கமாய் கேசவ். கதவோ
பூட்டிய நிலையில்! புருவ வளைவில் "எங்க போய்ட்டார்
இந்த அப்பா...?" என்கிற கேள்வி.

"கேசவ் எனக்கு தெரியும் என்கிறது."

"வந்தவள், என்ன குலைக்கறே... எப்ப குலைக்கணு அப்ப தூங்கிட்டு இப்ப என்ன குலைப்பு வேண்டி கிடக்கு பேசியபடி ஹேண்ட் பாக்கை திறக்கிறாள். இன்னொ சாவி.

திறந்தபடி உள் நுழைகிறாள். ஞாபகமாக கேச வெளியே தள்ளி திரும்ப கதவை சாற்றிக் கொள்கிறா

சோர்வாக நடந்து படுக்கையில் விழுகிறாள். எதிரிலே டெலிபோன். மாலா ஞாபகம் தட்டுகிறது.

எண்களை சுழற்றி விட்டு வேண்டாம் என்கிற மா முடங்குகிறாள். நேரில் போனாலே சரியாக ப சொல்லாது ஜி.எச். போனில் தானா சொல்ல போகிறார்கள்?

கவலையாக இருக்கிறது,

மாலா விஷயத்தில் முதல் மூவ் ஒரு சூப்பர் தோல்வி.

அடுத்த மூவ்? யோசிக்க தொடங்குகிறாள். வெளிே கேசவிடம் அசாத்ய கோபம். கதவைக் கூட கால பிராண்ட ஆரம்பிக்கிறது அந்த ஜீவன்.

நீலாவுக்கு அதன் செயல் அட்டகாசமாகத் தெரிகிறது. கதவை திறக்கிறாள்.

"ஏய் கேசவ்... ஓடிப் போ! லொள்ளு பண்ண கார்ப்பரேஷனுக்கு போன் பண்ணுவேன். பிடிச்சிட் போய் விஷ ஊசி போட்டு கொன்றுவாங்க. பி கேர்ஃபுல்.

திரும்பக் கதவை சாத்திக் கொள்கிறாள்.

## 13

தொலைபேசி சிணுங்கல்!



கையில் எடுப்பவனுக்கு அச்சு அசல் நம்பியார் சாயல்.

"தலைவா... அந்த பொண்ணு வீட்டுக்கு வந்துட்டா. நீங்க போன் பண்ணலாம். ஆட்டோவுல வந்து இறங்குனதை பார்த்தேன்."

நீலாவின் வீட்டுக்கு அருகில் உள்ள டெலிபோன் பூத்தில் இருந்து ஒரு தாடிக்காரன் பேசுகிறான்.

"தேங்க்யூ... நீ வந்து சேர் மத்ததை நாங்க பாத்துக்கறோம்" என்கிற பதிலையும் வாங்கிக் கொள்கிறான்.

அங்கே போனை முடக்கும் நம்பியாரிடம் சாரி நம்பியார் போன்றவனிடம் ஒரு அலட்சிய சிரிப்பு, கூடவே.

"ஹலோ மிஸ்டர் கோபால்ராவ் உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா. உங்கபொண்ணுகூட எங்களைத்தானே தேடிக்கிட்டு இருக்கா..." என்கிற விளக்கம்.

கோபால்ராவ் ஏற்கனவே நசுங்கிய வாழைப்பழம் போல் இருந்தவர் மேலும் நசுங்கி பிதுங்கி வழிகிறார்.

"என்னப்பா சொல்றே நீ?"-என்று எதிர் கேள்வி கேட்கிறார்.

"தமிழ்லதானே சொன்னேன். உன் பொண்ணும் எங்களைத்தான் தேடிகிட்டு இருக்கா. அப்பா பொண்ணு இரண்டுபேருமே போலீஸ்ல இருக்க வேண்டியவங்க. பலே..." அவன் பாராட்டு கோபால்ராவை பதறவிடுகிறது.

"நீ பொய் சொல்றே... என் மகளுக்கு இந்த விஷயமா எதுவும் தெரியாது. நான் சொல்லலை அவளுக்கு..."

"நீ சொல்லாட்டி என்ன... அவ தோழி மாலா இருக்காளே சொல்ல..." அவன் மாலா பற்றி ஆரம்பித்து புஷ்பராஜ் மகள் திவ்யா வரைக்கும் சகலத்தையும் சொல்லி நிறுத்துகிறான்.

கோபால் ராவிடம் உறைந்த நிலை.

“என்ன ஸ்தம்பிச்சுட்டே... உன்னை பிராக்கெ பண்ணினமாதிரி இப்ப உன்மகளை பிராக்கெட் பண்ண போறேன் பாரு.” பேசியபடியே டெலிபோனை எட்டி பிடித்து அடுத்து முப்பத்து மூன்றாவது நொடியி நீலாவையும் பிடிக்கிறான் அவன்.

“ஹலோ யார் கோபால்ராவ் பொண்ணுதானே?”

“ஆமாம்...”

“ஆமா... ஆட்டோக்காரனை பிடிக்க முடியலியா?”

ஆமாம். பகீர்!

“என்ன திகைச்சிட்டே. உன் ஒவ்வொரு ஸ்டெப்பை பார்த்துக்கிட்டுதான் இருக்கோம். வேண்டாத வேல பாக்கறே. நாங்க என்னை உன்னையா பிடிச்சு போட்டே எடுத்தோம். எதுக்கு உனக்கெல்லாம் முந்திரிக்கொட்ட வேலை?”

“ஏய் யாருடா நீ... பாஸ்டாட்...”

“நிறுத்து... நிறுத்து... திட்டு வாங்கி மறுத்துபோ ஜென்மங்க நாங்க. பிளாக்மெயில் தொழில்ல டாக்ட பட்டம் வாங்கற தகுதியே எங்களுக்கு உண்டு. என் கவர்மென்ட்ல நாங்க கேட்டா கொடுக்க மாட்டாங் அதே மந்திரிங்கன்னா கொடுத்துடுவாங்க. மோசமா தேசம் இது. போகட்டும். உனக்கொரு விஷயம் தெரியுமா உன் அப்பா இப்ப எங்க கஸ்டடியில...”

“ஏய் என்ன சொல்றே நீ?”

அட ஆமாம்மா. நீ திவ்யாவுக்கு மாலாவுக்கு உதவறேன்னு எங்களைத் தேடினமாதிரி உன் அப்பா அவ நண்பர் சங்கரசுப்புக்கு ஆஜராகி இப்ப மாட்டிக்கிட்டா வயசானவர் இல்லியா?



அதான் போலீசுக்கெல்லாம் போய்ட்டார். நீ அந்த தப்ப பண்ணலை. அதுக்காக உனக்கு என்னோட பாராட்டுக்கள். சரி உன் அப்பா கூட பேசறியா?”

கேட்டுவிட்டு ரிசீவரை கோபால்ராவிடம் தர கோபால்ராவ் போனில் விசும்புகிறார்.

“நீலா... நல்லா வசமா மாட்டிக்கிட்டேம்மா. போலீஸுக்கு போனதால வந்த வினை. நீயும் போய் மாட்டிக்காதே. தயவு செய்து இவங்க சொல்றத செய்...”

போன் சட்டென்று வில்லன் கைக்கு திரும்புகிறது. இப்போது அவன் முறை.

“ஆமாம்மா... நாங்க சொல்றத செய்... இதுவரை போட்டோ எடுத்து பிளாக்மெயில் செஞ்சோம் வெரி ஃபர்ஸ்ட்டைம் எடுக்காமலே... ஒரு அஞ்சு லட்சத்த தயார் பண்ணிக்கோ, நாளைக்கு போன் பண்ணி இடத்தை சொல்றேன். அங்க வந்து கொடுத்தா உன் அப்பாவை பாக்கலாம். கூட்டிக்கிட்டும் போகலாம். நடுவுல அஜக்மஜக் வேலைல்லாம் பண்ணாதே.

நம்ம போலீஸ் பத்தி உனக்கு தெரியாது. எனக்கு தெரியும் நீ யார்... எப்படிப்பட்ட பொண்ணுன்னும் தெரியும். எங்களை இனி ஒருத்தன் பிடிக்க பொறந்து தான் வரணும்.

சுருக்கமா சொல்லிக்கிறேன். நிலா நிலா ஓடிவா மாதிரி நீலா நீலா ஓடிவா-பணத்தோட ஓ,கே! டொக்.”

அங்கே முடங்கிய தொலைபேசி இங்கே நீலாவை இயலாமையில் புரட்ட ஆரம்பிக்கிறது. கைகளை குத்திப் பிசைந்து உக்ரமாய் கேள்விகேட்டு சோபாவை ஒரு உதை.

அடுத்து என்ன செய்வது என்று தெரியாத திணறல் வேறு.

நைல் பாலீஷ் நகம் பல்லிடையே வதங்க ஆரம்பிக்கிறது.

போலீசுக்கு போவோமா? கேள்விப் பந்தும் எம்புகிறது?

எதிரியின் சுதாரிப்பை நினைத்து அது அப்படி ஆவியாகிறது.

என்னதான் செய்வது...?

அவனுக்கு பணிந்து போய் பணத்தை மட்டும் வி விடக்கூடாது.

நிச்சயம் எத்தனை கதவுகள் மூடிக்கொண்டாலும் ஒ எறும்பு போய் வரவாவது எங்காவது பாதை இருக்கும்.

இப்பொழுது தேவை எல்லாம் பதட்டமில்லா கான்சென்ட்ரேஷன்.

சோபாவில் விழுகிறாள்.

மல்லாக்க பார்த்தபடி யோசிக்க தொடங்குகிறாள்.

வழி...வழி...வழி...

அவள் யோசனையில் கேசவ் மண் அள்ளிப் போடுகிற

லொள் லொள்ளில் கின்னஸ்ல ரிக்கார்ட் செய்ய போல இருக்கிறது.

எரிச்சல் மண்டுகிறது.

எழுந்து போய் கதவைத் திறக்கிறாள்.

கேசவ்-பளபள விழிகளோடு பரிதாப பார்வையோடு

கோபால்ராவ் இருக்கும் இடம் எனக்குத் தெரியு என்கிற கர்வத்தோடு...

''இரு இரு கார்ப்பரேஷனுக்கு போன் பண்றேன். இ அந்த கிழவன் ஒரு ஆபத்துல மாட்டி கிட்டிருக்கு. எனக்கு என்ன பண்றதுன்னு தெரியலை. நீ என்ன டான் குலைச்சு உயிரையா எடுக்கற?''

நீலா உள்ளே திரும்பி நடந்து டெலிபோனை தொடப்போகிறாள். அந்த வினாடி நேர இடைவெளியில் அதுவே சிணுங்கி அழைக்கிறது.



திரும்பவும் அந்த வில்லனோ?

காது கொடுத்து கேட்கிறாள் படபடப்போடு... நல்ல வேளை மறுமுனையில் கமிஷனர் கருணாகரன்.

''எங்கம்மா கோபால்ராவ் இல்லியா?'' கேட்கிறார்.

இவருக்கு எந்த பதில சொல்ல... திணறலான திணறல் நீலாவிடம். மௌனம் தொடருகிறது.

''என்னம்மா பதிலே காணோம். அவர தைரியமா இருக்க சொல். சிட்டி பூரா ரவுண்ட்சுக்கு ஏற்பாடு பண்ணிட்டேன். உங்க வீட்டு கூட காவல் போட்ருக்கேன், ஆனா யாருக்கும் தெரியாது.''

கருணாகரன் பேசும் தோரணை பார்த்தால் இனியும்தான் மட்டும் எதற்கு மறைத்துக் கொண்டு என்று தோன்றுகிறது நீலாவுக்கு.

''அங்கிள்... நானே உங்ககூட பேசணும்னு இருந்தேன்...'' பேச ஆரம்பித்து சகலத்தையும் சொல்லி முடிக்கிறாள் அவள்.

''அப்ப நீ தனியா இருக்கியா அங்கே?''

''ஆமா...''

''பயப்படாதே நானே வர்றேன். வந்து என்ன பண்றதுன்னு யோசிப்போம்.''

"சொன்னது போலவே பதினைந்தாவது நிமிடம் வந்து விட்டார் கருணாகரன்.

சோகமாக வரவேற்கிறாள் நீலா.

கேசவ் குலைத்தபடி அவரையும் சுற்றி வருகிறது.

''யாருது இந்த நாய்?''

''எங்க நாய் தான் கேசவ்!''

''எதுக்கு இப்படி குலைக்குது?''

"அதை வீட்ல சேக்கலை. தெருவுல அடிச்சு விரட்டிட்டேன். அந்த கோபம்..."-அவள் பதில் சொல்லு போதே.

"அம்மா அயர்ன் இருக்கா?" என்று கேட்கிறான் வெளியே சாலையில் இருந்தபடி மொபைல் சலவைக் காரன்.

"ஒண்ணுமில்லேப்பா..."

"அய்யா இங்க ஒரு கார்ல ஏறி போனார். இந்த நாய்கூட துரத்திகிட்டு போயிச்சே..."

அவன் தன் பங்கு க்ளூவை எதார்த்தமாக உமிழ்க... என்ன சொன்னே இந்த நாய் அப்பா கார் பின்னாடி போயிச்சா?"

"ஆமாம்மா... அப்ப போனது... நீங்க வரும்போது தா... வந்திச்சு. ஏம்மா இப்படி வெளிய பிடிச்சு தள்... விட்டுட்டீங்க. பாவம்பா."

அவன் நகர்ந்து கொள்கிறான். நீலாவின் விழிகளி... இப்பொழுது விளக்கெரிகிறது. அமானுஷ்ய ஒளியோடு கருணாகரனை பார்க்கிறாள்.

"புரிஞ்சு போச்சும்மா எனக்கும்... ஏய் கேசவ் ஓடு... பாப்போம். போங்க உங்க பாஸ் போன வீட்டுக்கு நா... போகணும். நாங்க பின்னாலயே வரோம்...!"

கேசவ் 'அடுத்த நொடி சாலைக்கு தாவியது' நீலா கருணாகரன் ஜீப்பில் தாவி ஏறினாள்!

அந்த தொலைபேசி அலறல் அவனுக்கு ஆச்சரியம் தந்தது. கையில் எடுக்கிறான்.

"ஹலோ சீட்டிங் பார்ட்டி நான் நீலா பேசறேன்."

அவன் திகைக்கிறான்.



"ஏய் என் நம்பர் உனக்கெப்படி தெரியும்?"

"உன் அட்ரஸே தெரியும்போது போன் நம்பரை கண்டு பிடிக்கறதா கஷ்டம். போத்திகிட்டுப் படுத்துக்கலாம். படுத்து கிட்டும் போர்த்திக்கலாம் தெரியும் தானே...?"

"சரி என்ன விஷயம்?"

"சினிமா ஸ்டைல்ல சொல்றேன்... கொஞ்சம் ஜன்னலை திறந்து பாரேன்."

அவன் திறந்து பார்க்கிறான். அந்த பங்களா வாசல் முன் சாரி சாரியாக போலீஸ்."

"என்ன பாத்துட்டியா... பைத்தியக்காரன் மாதிரி தப்பிக்க எதாவது பண்ணாதே. என் அப்பா மேலையும் ஒரு துரும்பு கூட விழக்கூடாது. இதுவரை பண்ணின குற்றத்துக்காக அதிக பட்சம் ஆயுள் தண்டனை கிடைக்கலாம். அடிதடி கொலைன்னு தாவி தூக்குல தொங்கிடாதே என்ன?"

அவனிடம் வெளிறல்.

"ஹலோ அப்படியே போனை எங்கப்பாகிட்ட தர்றியா?"

அவன் மௌனமாய் தருகிறான்.

"யாரு நீலாவா பேசறது...?"

"ஆமாம்... வீட்டுக்கு வாங்க வெச்சுக்கறேன்..."

"கோபால்ராவ் முழிக்கத் தொடங்க, கமிஷனர் கருணாவின் பங்களாவில் நுழைய ஆரம்பிக்கிறார்.

(முற்றிற்று)